# “பட்டதாரிகள் கிராமங்களுக்குள் போய் பணியாற்ற வேண்டும்”

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலா 11
இதழ்: 249
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 3 ஷஃபான் 7 ஞாயிற்றுக்கிழமை [19-10-69]

யாழ்நகர் கணேசன் ஸ்ரோர்ஸ்
அழைக்கின்றது.
தீபாவளி பண்டிகைக்கு வேண்டிய
பிடவைத் தினுசுகளையும்
றெடிமேட் ஆடைகளையும்
புதுப்புது வண்ணங்களில் தெரிவுசெய்ய
இன்றே விஜயஞ் செய்யுங்கள்.
கணேசன் ஸ்ரோர்ஸ்
78 - 63, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தீபாவளி
மலிவு விற்பனை
மகத்தான ஆரம்பம்
19 — 10 — 1969
உங்கள் பண்டிகைக் கேற்ற ஜவுளித் தினுசுகளையும் சேலைவகைகளையும் மிகவும் மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளச் சிறந்த ஸ்தாபனம்.
சாறி எம்போறியம்
124, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 1449

## எல்லைக்காந்தியின் அறிவுரை

புதுடில்லி, அக் 18

புதிய பட்டதாரிகள் கிராமப்பகுதிகளுக்குச் சென்று கிராம மக்கள் மத்தியில் வகுப்பு ஒற்றுமையும் அமைதியும் நிலவ பாடுபட வேண்டும் என்று கான் அப்துல் கபார்கான் இன்று ஆமதாபாத்திலுள்ள வித்தியாபீடத்தின் 22-வது பட்டமளிப்பு விழாவில் உரைநிகழ்த்துகையில் கேட்டுக் கொண்டார்.

49 ஆண்டுகளுக்கு முன்னர் மகாத்மாகாந்தி இந்த வித்தியாபீடத்தை ஆரம்பித்தார்.

பட்டதாரிகள் கிராமமக்களிடையே போய் பணியாற் வேண்டும். இந்துக்கள்மத்தியில்ற மட்டுமின்றி முஸ்லிம் மக்கள் மத்தியில் போய் சேவை புரிவதற்கு பட்டதாரிகள் தயங்கக் கூடாது என்று பாதுஷாகான் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் பிரிவினைபற்றியும் அதன் சரித்திரம்பற்றியும் அவர் விபரித்தார். பாகிஸ்தான் பிரிவினைக்காக பாடுபட்டவர்கள் இந்தியாவிலுள்ள இந்தியர்கள்பற்றி அக்கறை கொள்ளாமல் போய்விட்டார்கள். அந்த வகையில் முஸ்லிம்லீக் முஸ்லிம்களைத் தவருன வழியில் அழைத்துச் சென்றது என்ருர் பாதுஷாகான்.

## சிறுபான்மைத்தமிழர் செனட்டராவதற்கு

# அரசாங்க ஆதரவையும் பெறுவதற்கு முயற்சி

## ‘முழுத்தேவைக்கும் அரசை நம்பியிருக்கக் கூடாது’

### பாடசாலை கட்டிடத் திறப்பு விழாவில் நல்லூர் எம் பி.

யாழ்ப்பாணம், ஞாயிறு

“அரசாங்கம் கல்லூரிகளைப் பொறுப்பேற்றுவிட்டதால் கல்லூரிகளின் முழுத் தேவைகளையும்அரசாங்கமே நிறைவேற்றும் என்று எதிர் பார்க்கமுடியாது. நாமே எமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக எம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.”

நல்லூர் ஆட்சிமன்ற உறுப்பினர் டாக்டர் இ.மு.வி. நாகநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியின் புதிய மேல்மாடிக்கட்டிடத்திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. கட்டிடத்தைத் திறந்துவைத்த டாக்டர் நாகநாதன் மேலும் பேசியதாவது:-

கல்லூரியின் வளர்ச்சி ஆசிரியர்களிடம்மட்டும் தங்கியிருக்கவில்லை. பெற்ருேர்' மாணவர், பழைய மாணவர் ஆசிரியர்கள் ஆகிய நான்கு துருவங்களும் ஒன்ருகச் சேர்ந்து பாடுபடல் வேண்டும்.

அப்போது தான் ஒரு கல்லூரி. அது நிறுவப்பட்ட இலட்சியத்தை ஈடேற்ற முடியும். இந்த ரீதியில் இக் கல்லூரி மாணவர்களும், பழைய மாணவர்களும், பெற்ருேர்களும், ஆசிரியர்களும் ஒன்றுபட்டு உழைத்ததாலேயே இக்கட்டிடத்தை நிறுவக்கூடியதாகவிருந்தது.

கல்லூரி அதிபர் திரு. எஸ். பி. நடராஜா தமது வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டதாவது.-

அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட பாடசாலையாக விருந்தாலும் அந்தப்பாடசாலை அச்சமுதாயத்துக்கே சொந்தமானதாகும். கல்வி கற்பதற்கு ஏற்றசூழ்நிலையை உருவாக்குவதற்கும், பாடசாலைகளின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டுவதற்கும், கல்வித்தரத்தைஉயர்த்துவதற்கும், பெற்ருேர்களதும், பழைய மாணவர்களதும் ஒத்துழைப்புத் தேவை. அற்ப காரணங்களுக்காக பிள்ளைகளை வீட்டில் மறிக்க்கூடாது. பிள்ளைகள் பாடசாலைகளுக்கு வராமல் இருப்பதினுல் ஆசிரியர்களின் உற்சாகம் குன்றுகின்றது. வகுப்பறைவேலை பாதிக்கப்படுகின்றது. பிள்ளைகள் பாடங்களில் பின்தங்குகின்றனர்.

விழாவுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வட்டார வித்தியாதரிசி திருமதி. பாமர் பேசுகையில் ஆறு இல்லாத ஊருக்கு அழகில்லை என்ற பழமொழி போல பாடசாலை இல்லாத கிராமத்துக்கும் அழகில்லை என்று குறிப்பிட்டார்.

கல்லூரி மாணவ மாணவிகளின் கூட்டுப்பாடல், நடன நாடக நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (கா நி.)

## விஞ்ஞான ஆசிரியர் இடமாற்றம்

# காலையில் காரைநகர் மாலையில் யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

காலையில் காரைநகரில் கல்வி கற்பித்த பட்டதாரி ஆசிரியர் அன்று மாலை யாழ்ப்பாணத்துக்கு தந்தி மூலம் இடமாற்றம் செய்யப்பட்டார். காரணம் தெரியாத ஆசிரியர் அன்று மாலை யாழ்ப்பாணத்துக்கு வந்து கல்வி கற்பித்தார்

காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரான சி கந்தசாமி என்பவரே இப்படியான இடமாற்றத்துக்கு உள்ளானவராவார்

காலையில் யாழ்ரன் கல்லூரியில் கல்வி கற்பித்துக் கொண்டிருக்கும்போது உடனடியாக யாழ்ப்பாணம்இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கல்வி இலாகர்விடமிருந்து நண்பகல் தந்தி கிடைத்ததால் அன்று மாலை இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு சென்று கல்வி கற்

## உடுப்பிட்டிக்கும் பிரதமர் விஜயம்

உடுப்பிட்டி, சனி

அடுத்த மாதம் வடபகுதிக்கு வரும் பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயக்கா

## தெய்வ பக்தியை ஏற்படுத்த வழி'

யாழ்ப்பாணம், ஞாயிறு

‘கலைகளுக்கெல்லாம் தெய்வம் கலைமகள். வீடுகள், கோவில்கள் ஜனசமூக நிலை

# தமிழ்க்கட்சிகள் அளிக்கும் ஆதரவு மட்டும் போதாது

கோட்டை, சனி

தமிழரசுக்கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும், சிறுபான்மை தமிழர்சமூகத்தை சேர்ந்த ஒருவரை செனேட்டராக்குவதற்கு சம்மதம் தெரிவித்தபோதிலும் அதற்கு தேவையான வாககுகள் போதாமலிருக்கிறது. இதனுல் அரசாங்க கட்சியிலுமிருந்து மேலதிகமாக இருக்கும் சில வாக்குகளை பெறுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகிறது

கொழும்பு [illegible] கல்லூரி ஆசிரியரும், சிறுபான்மை தமிழர்சமூகத்தை

ஒருவரை செனெட்டராக்குவதாக உறுதி யளித்துள்ளனர்

தமிழரசுகட்சியிடம் 12 வாக்குகளும், தமிழ்காங்கிரஸில் 3 வாக்குகளும் இருக்கின்றன செனெட்டர் தெரிவிற்கு இவ் வாக்குகள் போதாமலிருக்கில. தமிழர் சுயாட்சி கழகத்தலைவர் திரு வி நவரத்தினம், சீனசார்பு கம்யூனிஸ்ட்கட்சியை சேர்ந்த கம்பஹா எம் பி திரு [illegible] பண்டார நாயக்கா சிங்களமகாஜனக் கட்சித்தலைவர் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா ஆகியோரின்

வகுத்ததாக கூறி தமிழரசுக் கட்சி இவ்விஷயத்தில் அரசியல் லாபம் தேட முயற்சிக்குமாகுல் சிறுபான்மைத் தமிழர் ஒருவரை செனட்டராக்குவதற்கு கொடுத்த ஆதரவை மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலைமை ஏற்படும் என்று தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் வலியுறுத்தியிருக்கிருர்.

ஆசிரியர் திரு. ரி. இராஜலிங்கத்தை சிறுபான்மைத் தமிழர் அபேட்சகராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுப்பிட்டிக்கும் பிரதமர் விஜயம்

உடுப்பிட்டி, சனி

அடுத்த மாதம் வடபகுதிக்கு வரும் பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயக்கா உடுப்பிட்டித் தொகுதிக்கும் விஜயம் செய்யவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

பிரதமர் திரு. டட்லியும், உயர் அதிகாரிகளும் உடுப்பிட்டித் தொகுதியில் முக்கிய குடியேற்றத் திட்டமும், முன்னேற்றம் பெற்றிருப்பதுமான மண்டான் குடியேற்றத்திட்டத்தையும் பார்வையிடுவர் எனவும் தெரிகிறது

வடமராட்சியில் பிரதமரை வரவேற்பதற்கான ஒழுங்குகளைக் கவனிக்குமுகமாக வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் தலைமையில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கிராம சேவையாளர்கள் கலந்து கொண்டனர்

## தெய்வ பக்தியை ஏற்படுத்த வழி'

யாழ்ப்பாணம், ஞாயிறு

'கலைகளுக்கெல்லாம் தெய்வம் கலைமகள். வீடுகள், கோவில்கள் ஜனசமூக நிலையங்கள் கிராமமுன்னேற்றச் சங்கங்கள், பாடசாலைகள் கலைமகள் விழாவைக்கொண்டாடுவதால் இளம் சிறுக்கள் மத்தியில் தெய்வ பர்தியை சுலபமாக ஏற்படுத்த முடியும்.'

திருநெல்வேலி வாணி கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற வாணி விழாவுக்குத் தலைமை வகித்த இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு செ. தனபாலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. சேந்தன் தலைமையில் நடைபெற்ற கவி அரங்கில் கவிஞர்கள் இ. நாகராஜன், வே. ஐயாத்துரை, வ. திருச்செல்வம் ஆகியோர் கலந்துகொண்டனர் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (கா. நி)

## தமிழ் ஆசிரியர் விரும்பினல் பரீட்சை பின்போடப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கல்லூரி அதிபருக்கான 2ம் 3ம் தரத்திற்கும், விசேஷ பதவிகளுக்கான 2ம் 3ம் தரத்துக்கும் நடாத்தப்படும் தமிழ் ஆசிரியர்களுக்கான நேர்முகப்பட்சை தமிழ்ஆசிரியர்கள் விரும்பினல் பின் போடப்படும்.

இந்தத் தகவலை கல்வி இலாகா டைரக்டர் ஜெனரல் வடமாகாண ஆசிரியர் சங்கத்துக்கு அறிவித்துள்ளார்

இந்த நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பட்ட கடிதங்கள் தமிழ் ஆசிரியர்களுக்கு மொழிபெயர்ப்பு எதுவும் இல்லாமல் தனிச் சிங்களத்தில் அனுப்பட்டதால் ஏற்பட்ட கஷ்டத்தை விபரித்து வடமாகாண ஆசிரியர் சங்கம் கல்வி இலாகா டைரகடர் ஜெனரலுக்கு அனுப்பி வைத்ததைத் தொடர்ந்து அவர் அனுப்பி வைத்தபதிலிலேயே இதனைத் தெரிவித்திருந்தார்

கல்வி இலாகா ஊழியர்கள் வேலை நெருக்கடி காரணத்தாலேயே மொழிபெயர்ப்பு இணைக்கப்படாமல் நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் தனிச் சிங்களத்தில் அனுப்பப்பட்டதாகவும், இதனல் தமிழ் ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்துக்குதான் மிகுந்த கவலையடைவதாகவும், தமிழ் ஆசிரிய விண்ணப்பக்காரர்கள் விரும்பினல் இந்த நேர்முகப்பரீட்சை பின்போட ஒழுங்கு செய்யப்படலாம் எனவும் கல்வி இலாகா டைரக்டர் ஜெனரல் வட மாகாண ஆசிரியர் சங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ள பதிலில் தெரிவித்துள்ளார் (கா நி)

லூரியில் கல்வி கற்பித்துக் கொண்டிருக்கும்போது உடனடியாக யாழ்ப்பாணம்இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கல்வி இலாகாவிடமிருந்து நண்பகல் தந்தி கிடைத்ததால் அன்று மாலை இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு சென்று கல்வி கற்பிக்க நேர்ந்ததாம்

திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் கடந்த ஜனவரிமாதம் பதுளையிலுள்ள ஊவாக் கல்லூரிக்குமாற்றப்பட்டு கடைசியாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டார். 10 மாதத்திற்குள் இவர் மூன்று பாடசாலைக்கு மாற்றப்பட்டாராம் (கா நி)

போதாமலிருக்கிறது. இதனல் அரசாங்க கட்சியிலுமிருந்து மேலதிகமாக இருக்கும் சில வாக்குகளை பெறுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகிறது

கொழும்பு சென் ஜோசப் கல்லூரி ஆசிரியரும், சிறுபான்மை தமிழர்சமூகத்தை சேர்ந்தவருமான திரு. ரி. இராஜலிங்கத்தை செனெட்டராக்குவதற்கு. தமிழரசுக்கட்சியும், தமிழ்காங்கிரஸ் கட்சியும், வாக்குகளை கொடுக்க சம்மதம்தெரிவித்துள்ளன.

நல்லூர் எம்.பி. டாக்டர் ஈ எம் வி நாகநாதனும் யாழ்ப்பாணம் எம் பி திரு. பொன்னம்பலமும் சிறுபான்மை சமூகத்தை சேர்ந்தவிற்கு இவ் வாக்குகள் போதாமலிருக்கிலது தமிழர் சுயாட்சி கழகத்தலைவர் திரு வி நவரத்தினம், சீன சார்பு கம்யூனிஸ்ட்கட்சியை சேர்ந்த கம்பஹா எம் பி திரு எஸ் டி பண்டாரநாயக்கா சிங்கள மகாஜனக் கட்சித்தலைவர் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா ஆகியோரின் ஆதரவை பெறுவதற்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இவர்களுடைய வாக்குகள் கிடைத்தாலும் மேலும் சில வாக்குகள் தேவைப்படுவதால் அரசாங்கக் கட்சியின் ஆதரவைப் பெறவும் முயற்சி நடக்கிறது.

சிறுபான்மைத் தமிழரை செனட்டராக்கும் விஷயத்தில் தாங்கள் தாம்முதலிடம் செய்யவேண்டிய நிலைமை ஏற்படும் என்று தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் வலியுறுத்தியிருக்கிறர்.

ஆசிரியர் திரு. ரி. இராஜலிங்கத்தை சிறுபான்மைத் தமிழர் அபேட்சகராக நிறுத்துவதற்கு தமிழரசுக் கட்சி முடிவு செய்துள்ளதாக தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தெரிவித்துள்ளார். செனட்சபை தேர்தலின்போது வேறு எந்தக் கட்சி அபேட்சகர்களுக்கும் ஆதரவு அளிக்கப் போவதில்லை என்றும் திரு. செல்வநாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

இலட்சியத்தை ஈடேற்ற முடியும். இந்த ரீதியில் இக் கல்லூரி மாணவர்களும், பழைய மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஒன்றுபட்டு உழைத்ததாலேயே இக்கட்டிடத்தை நிறுவக்கூடியதாகவிருந்தது. போல பாடசாலை இல்லாத கிராமத்துக்கும் அழகில்லை என்று குறிப்பிட்டார்.

கல்லூரி மாணவ மாணவிகளின் கூட்டுப்பாடல், நடன நாடக நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (கா நி.)

## "சிறுபான்மைத்தமிழரை செனட்டராக நியமிக்குக" பிரதமரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

"ஆட்சிமன்றத்திலும் செனட் சபையிலும் சிறுபான்மைத்தமிழர் சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் இல்லாத குறையை அண்மையில் நடைபெறவிருக்கும் செனட்சபை தேர்தலின் மூலம் நிவர்த்தி செய்யப்படவேண்டும்" என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவைக் கோரும் தீர்மானம் ஒன்று சிறுபான்மைத் தமிழர் ஐக்கியமுன்னணிக்காரிய நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இணைத் தலைவர்களுள் ஒருவரான ஆசிரியர் க. நடராசா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அண்மையில் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்திருந்த தவத்திரு குன்றக்குடிஅடிகளார் குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதியில் தீண்டாமை ஒழிப்பு பற்றி தீவிரமாகப் பிரசாரம் செய்தமைக்காக அவருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றி அனுப்பப்பட்டது.

சாகித்திய மண்டலப் பரிசில்கள் பெற்ற கவிஞர்கள் காரை செ. சுந்தரம்பிள்ளைக்கும், நவாலியூர் செல்லத்துரை, மற்றும் கவிஞர் ஐயாத்துரை ஆகியோருக்கும் பாராட்டுக்கள் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

நிர்வாகக் காரியதரிசி திரு க குலேந்திரம் ஜே. பி., பொதுக்காரியதரிசி ஐயாத்துரை ஆகியோரும் பேசினர்.

## வானெலிக் கலைஞர்களுக்கு பயிற்சிக் கல்லூரி

கோட்டை, சனி

வானெலி கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்கும் கொழும்பில் விரைவில் ஒரு பயிற்சிக் கல்லூரியை நிறுவுவதற்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

இதற்காக வானெலி கூட்டுஸ்தாபனம் குதிரைப் பந்தய திடலில் 2கோடி ரூபாவுக்கு 15 ஏக்கர் நிலப் பரப்பை வாங்கியுள்ளது.

இங்கு நிறுவப்படும் பயிற்சிக் கல்லூரியின் மூலம்நவீன கலை நுட்பங்களும் தொழில் நுட்பங்களும் பயிற்றப்படுமெனவும் இதனல் இலங்கையின் ஒலிபரப்புச் சேவை நல்ல முன்னேற்றத்தை அடையுமெனவும்ஒலிபரப்பு கூட்டுஸ்தாபன அதிபர் திரு நெவில் ஜயவீரா தெரிவித்துள்ளார்.

# கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க மகாநாடு கோரிக்கை

(உடுப்பிட்டி, புலோலி நிருபர்கள்)

**அரசாங்கம் இந்து அறநிலைய மசோதாவொன்றைக் கொண்டுவந்து நீண்ட காலமாக நிலவிவரும்தீண்டாமைப் பிரச்னையை சட்டரீதியாக நீக்கவகை செய்ய வேண்டும். இந்து அறநிலைய மசோதாவை இயற்றி அதன் மூலம் இந்துசமயத்தில் நம்பிக்கை கொண்ட அனைவர்க்கும் ஆலயவழிபாட்டு உரிமையை உத்தரவாதம் செய்ய வேண்டும்.**

இவ்வாறு கோரும் தீர்மானமொன்று இன்று இலங்கை கம்யூனிஸ்ட் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளன யாழ் மாவட்ட கிளையின் 6-வது மகாநாட்டில் நிறைவேற்றப் பட்டது.

நெல்லியடி லட்சுமி தியேட்டர் மண்டபத்தில் இம் மகாநாடு நடைபெற்றது. திரு. பொன். குமாரசாமி தலைமையில் இன்று காலை ஆரம்பமான மகாநாட்டில் வடமாகாணத்தின் பலபகுதிகளிலிருந்தும் கம்யூனிஸ்ட் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். செங்கொடி வணக்கத்துடன் மகாநாடு ஆரம்பமானது.

இம்மகாநாட்டிஒ தீர்மானிக்கப்பட்ட மற்றைய தீர்மானங்கள் வருமாறு -

மகாவலிகங்கையை வடக்குக்கு கூடியவிரைவில் திருப்புவதுடன் யாழ். குடாநாட்டின் நீர்ப்பாசன ஆற்றலை அதிகரிக்கச் செய்யவேண்டும்.

பனைத்தொழில் கூட்டுத்தாபனம் நிறுவி பனைதரு பொருட்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். இது பற்றி காலஞ்சென்ற பிரதமர் திரு. ஆர். டி. பண்டாரநாயக்கா காலத்தில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் முடிவுகளை அமுல்படுத்தி இப்பகுதியில் பனை வளத்தைப் பெருக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

யாழ். குடாநாட்டிலும் அதன் அயலிலும் பெற்றேல் பெறும் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து இத்தொழிலை வளம்பெறச் செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

தமிழ்ப்பல்கலைக்கழகமொன்று தமிழ்பிரதேசக் கலாச்சாரப் பின்னணியில் நிறுவவேண்டும். அதன் பிரிவுகளை அவசியத்தின் பொருட்டு வடக்கிலும் கிழக்கிலும் நிறுவவேண்டும்.

## சோயஸ் 8-ம் திரும்பியது

மாஸ்கோ, அக் 18

ரஷ்யா விண்வெளிஆராய்ச்சிக் கென அனுப்பிய மூன்ருவது விண் வெளிக் கலமான சோயஸ்-8 இன்று பூமிக்கு பத்திரமாகத் திரும்பியது

இத்துடன் விண் வெளியில் மேடை அமைப்பதற்கான ஒருவாரகால விண் வெளி ஆராய்ச்சி முடிவுக்கு வந்துள்ளதாகத்தெரிவிக்கப்பட்டது

கடைசியாகபூமிக்குதிரும்பியுள்ள இந்த விண் வெளிக் கலத்தில்இருவர் பிரயாணம் செய்தார்கள் மூன்று விண்வெளிக் கலங்களிலும் அனுப்பப்பட்ட வீரர்களும் பலதரப்பட்ட பயனுள்ள ஆராய்ச்சிகளை நடத்திவிட்டு திரும்பியுள்ளார்கள் என ரஷ்ய தெரிவித்துள்ளது

## விரைவில் திறக்கப்படும்

பண் த்தரிப்பு, சனி

சில மாதங்களுக்கு முன் தீக்கிரையாக்கப்பட்ட இளவாலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கான புதிய கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்பட விருக்கிறது.

இதுவரைகாலமும் இச்சங்கம் தற்காலிக கட்டடம் ஒன்றில் நடை பெற்று வந்தது.

# 'தமிழ்த்தலைவர்கள் பிரிவினையால் மாவட்ட சபை கிடைக்கவில்லை"

## கெனமன் கூறுகிறர்

உடுப்பிட்டி-புலோலி, சனி

"இலங்கையில் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துவிட்டன. கடந்த மூன்று வருடகாலத்தில் செய்யப்பட்ட நாணய மதிப்புக் குறைப்புக் காரணத்தினல் நாட்டுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனல் முன்னர் ஒரு ரூபாவுக்கு வாங்கமுடிந்த பொருளை இன்று 1 ரூபா 75 சதம் கொடுத்து அதிக விலையில் வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. மத்திய வங்கி வெளியிடும் வாழ்க்கைச் செலவுப் புள்ளிவிபரங்கள் 112 ஆகப் பதிவு காட்டித் தேசிய அரசாங்கத்தின் ஆட்சியில் 132 ஆக அதிகரித்துவிட்டது. தேசிய அரசாங்கம் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நாடு வறுமை நிலையையே அடையும்"

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சிச் செயலாளர் திரு. பீட்டர் கெனமன் குறிப்பிட்டார். இலங்கைக் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க சம்மேளன யாழ் பிரதேச கிளையின் 6-வது மகாநாட்டின் மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு சொன்னர் கரணவாய் வடக்கு மூத்த நயினர் கோவில் முன்றலில் பொதுக் கூட்டமும் திரு. பொன் கந்தையா நினைவு தினக்கூட்டமும் நடைபெற்றது

திரு கெனமன் தொடர்ந்து கூறியதாவது:

இழந்த உரிமைகளை மீட்கப் போராட்டம் நடாத்திய தமிழ் மக்களுக்குக் கிடைத்தவை வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் தான் தமிழ் மக்கள் தென்னிலங்கையிலுள்ள சோஷலிஸ் சக்திகளுடன் இணைந்து செயல்படுவதின் மூலம் உரிமைகளைப் பெறமுடியும் இன்னும் தமிழ் மக்களுடைய பிரச்னைகள் தீர்க்கப்படாததை அனைவரும் உணர்ந்திருப்பீர்கள் தமிழ் மக்களின் பிரச்சினை சாதாரண பிரச்னை அல்ல

இவ்வித பிரச்னைகளில்

(4-ம் பக்கம் பார்க்க)

கிரிக்கெட்டெஸ்ட்

## இந்தியா 23-5

கைதராபாத், அக். 18

இந்தியாவுக்கும்- நியூஸிலாந்துக்குமிடையலான கிரிக்கெட்டெஸ் போட்டியின் மூன்ருவதுடெஸ்டின் மூன்ரும் நாள் ஆட்டம் இன்று ஆரம்பமானபோதுஇந்தியா தனது முதலாவது இன்னிங்சில்பகல் இடைவேளை வரை ஒரு விக்கட் நஷ்டத்துக்கு 17 ரன்ஸ் எடுத்திருந்தது. பத்திரிகை அச்சுக்குப்போகும் போது கிடைத்த ஸ்கோரின் படி இந்தியா 5 விக்கட்டுகளைஇழந்து 23 ரன்ஸ்களுடன் ஆடிக் கொண்டிருந்தது. ஏற்கனவே நியூஸிலாந்து தமது முதல்இன்னிங்சில் 181ரன்ஸ் எடுத்திருந்தது.


சிறந்தஅலுமினியப் பாத்திரங்களுக்கு

டொலர் அலுமினியம்

ONE-DOLLAR


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

கைத்தொழில் பொருள்கள் விற்பதற்கு, ஆண், நேர்மையுள்ள ஆள்கள் தேவை. திருஞானஸ் அன்கோ, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். 1097

பலவித ரேடியோக்கள் திருத்தும் 3 வருட அனுபவமுள்ள 30 வயதுக்குட்பட்ட மெக்கானிக் தேவை. சம்பளம் ரூபா 150/- நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும் K. V. விஸ்வலிங்கம், கோவிலாக்கண்டி, கைதடி. 1098

### WANTED

"Wanted a Departmental Manager Knowledge of Agro-Chemicals essential Apply with recent testimonials to Autos Ltp. 'Jaffna.'' 1484


## மாத முடிவில் ஆசிரியர்களுக்கு சம்பளம்

கோட்டை, சனி

வழமையாக எல்லாரையும் முந்திக்கொண்டு சம்பளம் பெற்றுக்கொண்டு வரும் ஆசிரியர்கள் இந்த மாதம் 25-ந் திகதி வரையில்தான் சம்பளம் பெறுவர். 'புதிய சம்பள அடிப்படையில் சம்பளப் பட்டியல்கள் சீர்பார்க்கப்படுவதுடன் புதிய சம்பள பதிவேடுகள் தயாரிக்கப்படுவதோடு, ஓய்வுச்சம்பளக் கழிவுகளை பழைய சம்பள அடிப்படையில் செய்ய வேண்டி இருப்பதாலும் வேலை மிக அதிகமாகிவிட்டதால் இந்தத் தாமதம் தவிர்க்கமுடியாதது என்றும் கல்வி திணைக்கள வட்டாரங்களில் கூறப்படுகிறது

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 19—10—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன்ட் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 49 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கீதமாளிகா, 7-35 விளையாட்டு, 7-45 வாத்திய இசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 சரஸ்வதிபூஜை அஞ்சல், 10-30 செய்திச்சுருக்கம்.

## விக்ரோறியா வெற்றி

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும்யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயக் கோஷ்டிக்கும் சிநேகித பூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் விக்டோறியாக் கல்லூரி 6-1 கோல்களால் வெற்றி பெற்றது. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

......

## தொல்புரம் வெற்றி

சுழிபுரம், சனி

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தினருக்கும், சங்கானை அண்ணா விளையாட்டுக் கழகத்தினருக்கும் இடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் தொல்புரம் மத்திய சன சமூக நிலையத்தினர் இரண்டு ஆட்டங்களிலும் 7.14-12:14 ஆகிய புள்ளிகளைப் பெற்று வெற்றி பெற்றனர். போட்டிக்கு திரு. இ. சிவராசா மத்தியஸ்தராக கடமையாற்றினார்.

......

## ஹென்றிக்ஸ் வெற்றி

பண்டத்தரிப்பு, சனி

யாழ்நகர் புனித சூசையப்பர் கழகத்திற்கும் இளவாலை ஹென்றிக்ஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் ஹென்றிக்ஸ் கல்லூரியினர் 2 கோல்களால் வெற்றி பெற்றனர். மேற்படி கல்லூரிமைதானத்தில் இவ்வாட்டம் நடைபெற்றது.

0 0 0

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியினருக்கும் இளவாலை ஜென்றிக்ஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் ஹென்றிக்ஸ் கல்லூரியினர் 3 கோல்களைப் போட்டு 1 கோலால்வெற்றியீட்டினர். நடேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் இவ்விளையாட்டு நடைபெற்றது.

......

## ஸ்கந்தா வெற்றி

சுழிபுரம், சனி

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உதைபந்தாட்ட கோஷ்டிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கோஷ்டிக்கும் சிநேகித பூர்வமாக நடைபெற்ற போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கோஷ்டி 2-0 கோல்களால்

# நவராத்திரி விழா

மட்டுவில், சனி

பனை மகாவித்தியாலயத்தில் நவராத்திரி விழாவின் இறுதி நாளான விஜயதசமி விழாவில், சங்கீதரத்தினம் திருமதி கமலம் மகாலிங்கத்தின் சங்கீதக் கச்சேரியும், மேற்படி மகாவித்தியாலய மாணவ மாணவிகளின் நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

0 0 0

கோப்பாய், சனி

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சன சமூக நிலையத்தினர் இம்முறை நவராத்திரிவிழாவை சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

0 0 0

யாழ்ப்பாணம், சனி

முள்ளியவளை சைவ வித்தியாலயத்தில் 12-ம் திகதி தொடக்கம் நவராத்திரி விழா ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

நவராத்திரி ஆரம்ப விழாவில் மாணவர்கள் மத்தியில் மேற்படி வித்தியாலயத் தலைமைஆசிரியர் திரு வே. தம்பையா சொற்பொழிவாற்றும்போது 'சர்வலோகத்திலும் நடைபெறும் ஈசுவரருடைய சிருஷ்டி முதலிய கிருத்தியங்கட்கும், அவரால் அனுட்டிக்கப்பட்ட தேவர் முதலாயினோருடைய ஆட்சிக்கும்சக்தியே துணைக்காரணமாயுள்ளது. என்ற காரணத்தால் தேவி பூஜை சிறப்புடையதென்றும் வீரத்தை வேண்டித் துர்க்கையையும், செல்வத்தைவேண்டி இலக்குமியையும், கல்வியைவேண்டி சரஸ்வதியையும் வழிபட்டு வருகின்றோம்.' என நவராத்திரி மகிமையை விளக்கிக் கூறினார்.

0 0 0

யாழ்ப்பாணம், ஞாயிறு

இன்று காலை யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் கலைமகள் விழா கொண்டாடப்படவிருக்கின்றது.

0 0 0

யாழ்ப்பாணம், ஞாயிறு

திரு. ஏ. திருநீலகண்டன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, செல்வன் எஸ். சிவசுப்பிரமணியம், டாக்டர் பி. சிவராஜா சொற்பொழிவாற்றுவார்கள்,

0 0 0

வேலணை, ஞாயிறு

வேலணை கலைமகள் சனசமூக நிலையத்தில் இன்று சரஸ்வதி பூஜை நிலையத்தலைவர் திரு. ப. அரசரத்தினம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

திருநெல்வேலி கலாமன்ற மண்டபத்தில் நாளை திரு வ. கார்த்திகேசு தலைமையில் நவராத்திரிவிழா நடைபெறவிருக்கிறது வித்துவான் கே. கணபதிப்பிள்ளை 'சக்தி வழிபாடு' என்னும் பொருள் பற்றியும், திரு. சி. ஜெயசீலன் 'நவராத்திரி மகிமை' என்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றுவர்.

0 0 0

யாழ்ப்பாணம் தொலைத் தொடர்புபொறியியற்பகுதி இந்து மன்ற சரஸ்வதி விழா இன்று மாலை மேற்படி காரியாலய முன்றலில் நடைபெறும். அரசாங்க அதிபர் திரு. எப். சி. பீட்டர்ஸின் சிறப்புரை, செல்வி ரஜனி பாலசுப்பிரமணியத்தின் நடனம் மெல்லிசை வில்லுப்பாட்டு ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

0 0 0

யாழ்ப்பாணம் ஆயுர்வேதக் கல்லூரி மாணவ மன்றத்தின் ஆதரவில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை தலைமையில் நவராத்திரி விழா நாளை நடைபெறும். செல்வி பரமேஸ்வரி சின்னத்துரை, பண்டிதர் எஸ். இராசையா, மயிலை சிவ. சண்முகதாசன், மு லியார் சி. முத்துத்தம்பி ஆகியோரின் சொற்பொழிவும், இன்னிசை, நடனம், மெல்லிசை ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

0 0 0

திருநெல்வேலி சைவ முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் பரமேஸ்வராச் சந்தி விநாயகர் ஆலய முன்றலில் இன்றைய நிகழ்ச்சிகள் டாக்டர் கே. கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. எஸ். தனபாலசிங்கம், திரு. எஸ். கைலைநாதன் ஜே. பி. ஆகியோரின் கலை நிகழ்ச்சிகளும் சொற்பொழிவுகளும் நடைபெறும்.

0 0 0

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நவராத்திரி விழாவின் இறுதி நாளான நாளை கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

0 0 0

வட்டுக்கோட்டை கிழக்கு சித்தங்கேணி திருமுறைக் கழகத்தின் சார்பில் மேற்படி மாதர் சங்க மண்டபத்தில் நாளை நடைபெறும் நவராத்திரிவிழாவில் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் சொற்பொழிவாற்றுவார்.

## யாருடையது?

யாழ்ப்பாணம், சனி

மானிப்பாய் ரேட்டில் கோம்பையன்மணல் சுடலைக்கருகில் கூப்பன் புத்தகம் ஒன்று ஆனைக்கோட்டை வி இராசையா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இன்று நடைபெறும் கலைமகள்விழாவில் திரு. சி. சரவணபவானின் சொற்பொழிவும் லிங்கம் சகோதரர்களின் இன்னிசையும் நடைபெறும்.

மூளாய் வாணி நிகேதன வாசிகசாலையில் 9-வது ஆண்டுவிழாவும் சரஸ்வதி பூஜையும் இன்று நடைபெறுகின்றது. சொற்பொழிவுகள், புல்லாங்குழல் இசை. மெல்லிசை, நாடகம் ஆகியன நடைபெறும்.


## திருமண அழைப்பு

Dr. இ. சுவாமிநாதன் — கமலாம்பிகை

நிகழும் சௌமிய வருடம் ஐப்பசி மாதம் 7-ம் திகதி (23-10-69) வியாழக்கிழமை பகல் 11-25க்கு மேல் 12 மணிக்குள் வரும் சுபமுகூர்த்தத்தில்

நல்லூர் (காலஞ்சென்ற) பிரமஸ்ரீ சு. இராமசாமி ஐயர் அவர்களின் புத்திரன் சிரஞ்சீவி Dr. சுவாமிநாதனுக்கும்

நல்லூர் சிவன்கோவில் பிரமஸ்ரீ சு. தியாகராஜ ஐயர் அவர்களின் புத்திரி சௌபாக்கியவதி கமலாம்பிகைக்கும்

நல்லூர் சிவன் கோவிலில் விவாகம் நடைபெறவிருப்பதால் அத்தருணம் சுற்றம் சூழவந்து சிறப்பிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

இ. தியாகராஜா, 145, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

சு. தியாகராஜஐயர், நல்லூர் சிவன்கோவில் யாழ்ப்பாணம்.

1450

வெளிவந்து விற்பனையாகிக் கொண்டிருக்கிறது

## புவியியல் தேசப்படத் தொகுதி

(தமிழ் அற்லஸ்)

★ எல்லாப் புவியியல் மாணவர்களும் அவசியம் வைத்திருக்க வேண்டிய தேசப்படப் புத்தகம்

★ உலகம், இலங்கை, கண்டங்கள் யாவற்றிற்குமுரிய தரைத்தோற்ற, அரசியல், பொருளாதாரப் படங்கள் நிறைந்தது.

★ க. குணராசா B. A. Hons. (Cey.) ஆக்கியது.

விலை 3-75: வி. பி. பி. கவனிக்கப்படும்.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

இப்பொழுது திரையிடப்படுகின்றது

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

★ ரவிச்சந்திரன், ★ ஜெயலலிதா ★ நாகேஷ் நடித்த

அன்று கண்ட முகம்

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி—நிர்மலா சௌகார் ஜானகி நடித்த

லக்ஷ்மி கல்யாணம்

இப்பொழுது நடைபெறுகிறது

வெலிங்டன் [யாழ். நகர்]

தினசரி 2-30, 6-30 9-30 போயா, பிரிபோயா 4 காட்கள்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (கொழும்பு)



இன்று மட்டும்

வெல்லி சினிமா மானிப்பாய்

தினசரி 6-30, இரவு 9-30 பிரிபோயா, போயா 2-30 மணி

சிவாஜி - சரோஜாதேவி நடித்த

பாலும் பழமும்

வல்வெட்டித்துறை

றஞ்சனா தியேட்டர்

தினசரி 6-30, 9-30. பிரிபோயா, போயா 2-30

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த

மாடப்புறு

ஸ்ரீ காலிங்கா இணுவில்

தினசரி, 6-30, 9-30 பிரிபோயா, போயா 2-30 மணி

ஜெமினி கணேசன் - பத்மினி நடித்த


மல்லிகா

ராஜா (யாழ்ப்பாணம்)

Daily 4-45, 7, 9-45 P.M. Poya, Prepoya 4 Shows


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கெப்பிட்டல் (கொழும்பு)   பிளாஸா (கொழும்பு)


ரவிச்சந்திரன் ★ ராஜஸ்ரீ
நாகேஷ் ★ அசோகன் ★ ஸ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனோகர்
நடித்த
ஐரிஸ் மூவிஸாரின்
நீயும் நானும்

ஜெமினி கணேசன் - பத்மினி
நடித்த
மல்லிகா

ராஜா
(யாழ்ப்பாணம்)
Daily 4-45, 7, 9-45 P.M.
Poya, Prepoya 4 Shows
Beautiful Girls Daring acts
in
SEXY ALLNEON
(Adults only)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00&9-45pm
Poya Prepoya 10-30 a. m.
Restless Reckless Violent-
There never was a man like
'B L U E'
Terence Stamp
Joanna Petter
in
'B L U E'
(Scope-color)

REGAL JAFFNA
Daily 4-45,7& 9-45p m.
Poya, Prepoya 4 Shows
Margod Fonteyn,
Rudolf Nureyey
in
ROMEO And JULIET
(Royal Ballet)


## வெற்றி

சுழிபுரம், சனி

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உதைபந்தாட்ட கோஷ்டிக்கும் சுன்னுகம் ஸ்கந்தவரோதயா கோஷ்டிக்கும் சிநேகித பூர்வமாக நடைபெற்ற போட்டியில் சுன்னுகம் ஸ்கந்தவரோதயா கோஷ்டி 2-0 கோல்களால் வெற்றி பெற்றது. போட்டி விக்ரோறியாக்கல்லூரி விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றது.

## பிரியாவிடை

சுழிபுரம், சனி

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தவித்தியாசாலையில் தலைமையாசிரியராக கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. எஸ். சுப்பிரமணியத்துக்கு பிரிவுபசாரவிழா நடாத்தப்பட்டது.

குட்டி, செல்வன் எஸ். சிவசுப்பிரமணியம், டாக்டர் பி. சிவராஜா சொற்பொழிவாற்றுவார்கள்,

0 0 0

வேலணை, ஞாயிறு

வேலணை கலைமகள் சனசமூக நிலையத்தில் இன்று சரஸ்வதி பூஜை நிலையத்தலைவர் திரு. ப. அரசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது,

0 0 0

ஊரதீவு, சனி

ஊரதீவு திருநாவுக்கரசு வித்தியாசாலையில் தினசரி நவராத்திரி வழிபாடு நடைபெற்றுவருகிறது. இம்மாதம் 20-ந் திகதி தலைமையாசிரியர் க. சி. தருமலிங்கம் தலைமையில் வித்தியாசாலைப் பெற்றூர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் கலைமகள் விழாவும் நடைபெறும்.

# இன்றைய பலன்

ஐப்பசிமாதம் 3-ந் திகதி (19 - 10 - 69)

**மேஷம்-** காரியத்தில் வெற்றி கிடைக்கும். கவர்ச்சியான சம்பவங்களுக்கும் இடமுண்டு. புதிய தொழிலில் அதிக ஈடுபாடு ஏற்படலாம். நண்பர்கள் ஆதரவு தருவார்கள்.

**ரிஷபம்-** இதயக்கமலம் இன்பத்தால் மலரும். இல்லறத்தில் பிணைப்புகள் இறுகும். கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். சுற்றதாருல் பயனும் கிடைக்கும்,

**மிதுனம்-** நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம். கடமையாற்றும் இடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக்கொள்ளவும். சமயோசித புத்தியினுல் எதையும் சமாளிக்கலாம்.

**கடகம்-** குடும்பவழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும். நீண்டநாள் பூமிப்பிணக்குச் சமரசமாக முடிவடையும். காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு. சிறப்பானதினம்.

**சிம்மம்-** திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும். அடுத்துக்கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர். கடற்தொழிலாளர்கள் கவனம் செலுத்தவும். சிலருக்கு நூதனரோகம் தென்படலாம்.

**கன்னி-** தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள் சுற்றுடலில் மதிப்பு உயரும். புண்ணிய ஸ்தலமொன்றுக்கு யாத்திரை மேற்கொள்ளப்படலாம். தெய்வத்தின் துணை உண்டு.

**துலாம்-** முயற்சியால் முன்னேற்றம் கிடைக்கும். பதுக்களுடன் தொடர்புகள் பெருகும். பம்பரம்போல் சுழன்று பணியாற்றுவீர். பாராட்டுதலுக்கும்இடமுண்டு.

**விருச்சிகம்-** உழைப்பினுல் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்துறையில் விருத்தியுண்டு. தாய்வழிப் பொருள்வரவுக்கும் இடமுண்டு. உயர்கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாகதினம்.

**தனுசு-** கருடப்பார்வை உங்களை வட்டமிடும் எதிர்பாராதமுறையில் பொருள் செலவுக்கு இடமுண்டு. தொழில்துறையில் சிறிது மனக்கசப்பு தென்படலாம். அதிக சிந்தனைக்கும் இடமுண்டு.

**மகரம்-** இனிக்கப்பேசுவோர் விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும். பிறந்தகத்தின் நினைவு திடீரெனத் தலைதூக்கும் கடமையில் சோர்வு தென்படும். மனத்திடம் வேண்டும்.

**கும்பம்-** இன்று அருளும், பொருளும் இணைந்து கிடைக்கும். தொழில்புரியும் இடத்தில் பாராட்டப்படுவீர்கள். உற்சாகமூட்டும் கடிதமொன்று கிடைக்கலாம். சிறப்பானதினம்.

**மீனம்-** தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும். கணதுடைப்புவேலை நடக்கும். கவனம் செலுத்தவும். பெரியோரை பகைத்துக்கொள்ளாமல் பொறுமையை பேணி நடக்கவும்.


சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை


உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு நீங்கள்
செலுத்தும் பரிபூரண அஞ்சலி
ஏ. எவ். ரேமண்டஸ்
ஈமக் கிரியை ஏற்பாடுகள்
0231


புகழ் வாய்ந்த, மரியாதையான, பாதுகாப்பான ஈமக் கிரியைச் சேவை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது.
147, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(சுண்டிக்குளி சந்தியிலிருந்து 50 யார் தூரம்)

- இரவு பகல் எந்நேரமும் கிடைக்கும் சேவை.
- பண வசதிக்கு ஏற்ற பிரேதப் பெட்டிகள்.
- நவீன பாடை வாகனம்.
- பூதவுடலைச் சிறந்த முறையில் பாதுகாத்தல்
- புதைகுழியில் பிரேதப் பெட்டியைச் சுயமாக இறக்கும் கருவி.
- அழகான சமாதிகள்.

ஏ எவ் ரேமண்ட்ஸ்


ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


விவசாயத்திற்கு உயிரூட்டும்
பெக்ஸன் பம்ப்

இறுதிவரை நின்றுபிடிக்கக்கூடியது; நீண்டகாலப் பாவனை கருதி உருவாக்கப்பட்ட விரை வேகச் சுழற்சிப் பம்ப் பெக்ஸன்
பெக்ஸனின் சிறப்பு அம்சங்கள் :

* பரல் உராய்விஞல் தேய்ந்துபோகா அமைப்பு முறை கொண்ட வார்ப்பு இரும்பு.
* புதுக்கி அமைக்கும் பரப்பு கருவி, நீரை வெளிப்படுத்தும் முழுத் திறனும் கொண்டது.
* பெட்ரோல் / மசகு எண்ணெய் அல்லது டீசல் எஞ்ஜின் மூலம் சிக்கனமாக இயக்கக்கூடியது.

விற்பனையாளர்: ஓட்டோஸ் லிமிட்., 190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
இப்பொழுது கிடைக்கிறது:
HAYLEYS
ஹேலீஸ் லிமிட்டட்
எஞ்ஜினியரிங் விற்பனைப் பகுதி
400, டீன்ஸ் ரோட், கொழும்பு - 10. தொலைபேசி: 9331



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேரள மந்திரிகள் ஏழுபேர் ராஜினாமா செய்தனர்

## நம்பூதிரிபாட் ஆட்சி ஆட்டம் கண்டுள்ளது

திருவனந்தபுரம், அக்டோபர் 18

**கேரளத்தில் கூட்டுமுன்னணி அரசாங்கத்தில் மொத்தம் 7 மந்திரிகள் ராஜினாமா செய்துவிட்டார்கள். சுகாதார மந்திரி திரு. வெலிங்டன் கடந்த இரவு தமது ராஜினாமாவை முதலமைச்சரிடம் தாக்கல் செய்தார்.**

**நான்கு மந்திரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள லஞ்ச ஊழல்கள் பற்றி விசாரணை நடத்தப்படுமென்று முதலமைச்சர் திரு. நம்பூதிரி பார்ட் அறிவித்ததைத் தொடர்ந்து இவர்கள் ராஜினாமாச் செய்தனர்.**

கேரள மாநில அரசில் மொத்தம் 12 மந்திரிகள் இவர்களில் இப்பொழுது 7 பேர் ராஜினாமாச் செய்துவிட்டதால் அரசின் நிலைமை ஆட்டம்கண்டுள்ளது.

கார்ஷிக தொழிலாளர் கட்சியைச்சேர்ந்த சுகாதார அமைச்சர் திரு. வெலிங்டனுக்கெதிராக ராஜ்ய சட்ட சபையின் தீர்மானம் ஒன்று ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருந்தது. வேறு சில மந்திரிகள் மீதும் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. திரு. வெலிங்டனைத் தவிர்த்து மற்ற மந்திரிகள் மீதான குற்றச்சாட்டுகளைப் பற்றி விசாரணை நடத்துவதை கூட்டுமுன்னணியைச் சேர்ந்த முஸ்லிம் லீக், வலது கம்யூனிஸ்ட், பு. சோ., இந்திய சோஷலிஸ்ட் ஆகிய கட்சிகள் விரும்பவில்லையென்று தெரிகிறது. எனவே மற்ற மந்திரிகள் மீதான புகார்கள் பற்றியும் விசாரிக்கப்படும் என்று முதல் மந்திரி அறிவித்ததால் இந்தக்கட்சியைச் சேர்ந்த ஆறு மந்திரிகளும் ராஜினாமாச் செய்திருக்கிறார்கள். ராஜினாமா பற்றி மறு சிந்தனை செய்யும்படி திரு. நம்பூதிரி பார்ட் கேட்டிருக்கின்றார்.

# இஸ்ரேலிய படைகளில் அமெரிக்க பிரஜைகள்?

## ஐ. நா. விடம் புகார்

நியூயோர்க், அக். 18

அமெரிக்க பிரஜாவுரிமையுள்ள அமெரிக்கர்கள் இஸ்ரேலிய ராணுவத்தில் சேர்ந்து அரபுநாடுகளுக்கு எதிராக சண்டைகளில் ஈடுபடுவதற்கு அமெரிக்க அரசாங்கம் ஊக்கமளித்து வருவதாக ஐ நா.வின் பாதுகாப்பு சபையிடம் ஐக்கிய அரபுக் குடியரசு புகார் செய்திருக்கின்றது.

அமெரிக்கர்கள், தமது அமெரிக்க பிரஜாஉரிமையைத் துறக்காமலே இஸ்ரேலிய ராணுவங்களில் சேர்வதற்கு ஊக்கமளித்துவரு

இந்தக் குற்றச்சாட்டுகளை வாஷிங்டனில் ராஜாங்க அமைச்சைச் சேர்ந்த ஓர் அதிகாரி மறுத்தார் இஸ்ரேலில் அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவில் எவரும் படைகளில் சேர்ந்துகொண்டிருக்கவில்லையென்றும் ஒரு சில தொழில்நுட்ப நிபுணர்கள் தனிப்பட்ட முறையில் அங்கு தொழில் நடத்திவருவதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

நேற்று ஜோர்டானுக்கும் இஸ்ரேலியருக்குமிடையில் நடைபெற்ற பலத்த மோதல்களில் நான்கு இஸ்

### இடமாற்றத்தினால் கல்வி பாதிப்பு

வேலணை, சனி

வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலையில் இருந்து ஆசிரியர்களை ஒவ்வொரு மாதமும் இடமாற்றம் செய்வதால் இப் பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகளின் கல்வித்தரம் வெகுவாக பாதிக்கப் படுகிறது எனவே இப்பிள்ளைகளின் கல்வித் தரா

# சோவியத் கப்பலை தெ. வியட்னாமியர் சுட்டனர்

## டானாங் அருகில் சம்பவம்

சைகோன் அக். 18

தென் வியட்னாம் கடல்எல்லைப் பிரதேசத்தில் நடமாடியதாக கூறப்படும் சோவியத் கப்பலொன்றை தென் வியட்னாம் கடற்படையினர் சுட்டுத் துரத்தி விட்டதாக கூறப்படுகின்றது.

டானாங் நகருக்கருகில் தென் வியட்னாம் கடல் எல்லைக்குள் இந்தக்கப்பல் அத்துமீறி புகுந்ததாகவும் அதன் பேரில் அதனை வெளியேற்றும்படி உத்தரவிடப்பட்டதாகவும் தென்வியட்னாம் அரசாங்க அறிக்கை கூறியது:

சுடப்பட்ட கப்பலில் தீப் பற்றியதாகவும் ஒரு செய்தி கூறியது. ஆனால் கப்பல் உடனே எல்லைக்கு அப்பால் சென்றுவிட்டதாம்.

டானாங்கில் அமெரிக்க தளம் இருக்கும் பகுதிக்கு அப்பால் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது. சோவியத் கப்பல் திருப்பிச் சுட்டதா இல்லையா என்பது பற்றி தகவல் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

### 2 கோடி டாலர் கடனுதவி

புதுடில்லி, அக். 18

தனியார்துறைக்கு இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்காக அமெரிக்கா சமீபத்தில் இந்தியாவுக்கு 2 கோடி டாலர் கடனுதவி வழங்கியது. இதற்கான ஒப்பந்தம் டில்லியில் கைச்சாத்தானது.

### நமது நாட்டு ஜனத்தொகை

கோட்டை, சனி

இலங்கையின் ஜனத்தொகை ஒவ்வொரு வருடமும் 2,80,000 பேரால் அதிகரித்துக்கொண்டு வருகிறது இலங்கை [illegible] பா[illegible] 1968 1969-ம் ஆண்டு புள்ளி விபரப்படி இலங்கையின் ஜனத்

### விவசாயக்கடன்: தவணை நீடிப்பு

மட்டுவில், சனி

மட்டுவில் சோமாஸ்கந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 1968-ம் 69-ம் விவசாயக்கடனுக்கு மேலும் ஆறு மாத காலம் தவணை நீடிக்கப்பட்டுள்ளது

மட்டுவில் சோமாஸ்கந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில், 1968-ம், 69-ம் ஆண்டுக்கான விவசாயக் கடன் பெற்ற விவசாயிகள், விவசாயக் கடனுக்குமேலும் ஆறு மாதத் தவணைகோரி சமர்ப்பித்த மகஜரைத் தொடர்ந்து அதனை ஏற்று மேலிடத்திலிருந்து அனுமதி கிடைத்துள்ளது.

இதற்கிடையில் இவ்வாரத்திற்கிடையில் கடனைத் திருப்பிக் கொடுக்கத்தவறும் பட்சத்தில் அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்கள் பறிமுதல் செய்யப்படுமென அறிவித்ததைத் தொடர்ந்து இப்பகுதி விவசாயிகளில் சுமார் 90 சத விகிதத்தினர் தமது கடனை அடைத்துள்ளதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது

### பல கழகங்களால் பலனில்லை

வேலணை, சனி

கழகங்கள் தோன்றுவதிலும், மறைவதிலும் அர்த்தமில்லை. நாட்டிற்கு முற்போக்கான ஆக்கவேலைகளையும் சீர்திருத்தப்பணிகளையும் செய்வதிலும் செய்யத் தூண்டுவதிலும் இளைஞர்கள் ஒன்றாக இணைந்து ஒரு கழகமூலம் கருத்துக்களை வெளிப்படுத்துவதைத் தவிர்த்து பல கழககங்கள் தோன்றி தாம் எடுத்துக்கொண்ட விஷயம் சரியா அல்லது பிழையா என

### திராட்சை ஏற்றுமதி

பண்டத்தரிப்பு, சனி

இப்பகுதியில் திராட்சை அறுவடை துரிதமாக நடைபெறுகிறது. மழைக்கோலம் காணப்படுவதால் திராட்சையால் அதிக நஷ்டம் ஏற்படக்கூடுமெனவும் அஞ்சப்படுகிறது. வெளியூருக்கு தினமும் வியாபாரிகள் இதை ஏற்றுமதி செய்கின்றனர். புதிதாகப் பயிரிடப்பட்ட கறுப்பு இன திராட்சையும் தற்போது கிடைக்கக்கூடியதாகவிருக்கிறது. ஊர் திராட்சையிலும் பார்க்க கறுப்புஇனத் திராட்சை விலை அதிகமாக இருக்கிறது.

### திருடிய சைக்கிளை விற்றாராம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

திருடிய சைக்கிள் ஒன்றை விற்றுக்கொண்டு நின்றதாகக் கூறப்படும் ஒருவரைப் பொலிசார் கைது செய்தனர். யாழ்ப்பாணம் முனீஸ்வரம் வீதியில் இது நடந்தது.

பொலிசாரைக் கண்டதும் ஓட்டம் பிடித்தவரை சாதாரண உடையில் நின்ற யாழ்ப்பாணம் குற்றத் தடுப்பு இலாகாவைச் என். ஈ. இரத்தினம் துரத்திப் பிடித்து பொலிஸ்நிலையம் கொண்டுசென்றார். சைக்கிள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

### 'கல்வித்துறை பிளவுபட்டுக் கிடக்கிறது'

பருத்தித்துறை, சனி

"வகுப்பறைக் கல்வி மூலம் மட்டும் உத்தியோகத் துறையிற் போட்டியிட்டு முன்னேற முடியாது பொது அறிவு பெருமளவுக்கு இருந்தால்தான் போட்டிப்பரீட்சையில் முன்னேற முடியும் அண்மையில் நடந்த ஆசிரியர் தெரிவுப் பரீட்சையொன்றில் 'வியத் நாம்' என்பது எங்கேயுள்ளது என்பதைத் தெரியாது திகைத்தவர்களுமுண்டு" என்று அரசகரும மொழித்திணைக்கள உத்தியோகத்தர் திரு. வீ. சிவராஜசிங்கம், பருத்தித்துறை இளம் எழுத்தாளர் சங்க ஆதரவில் பண்டிதர் க. வீரகத்திஎழுதிய 'பொது அறிவுப் பூங்கா' என்னும் நூலை வெளியிட்டு வைத்துக் கூறினார்

"இன்று கல்வித்துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கலை. விஞ்ஞானம் என ஒன்றோடொன்று தொடர்பற்றிருக்கிறது. கலைப்பாடங்கள்

# 'அரசியலில் பொதுமக்கள் ஏனோதானோ என்றிருக்கிறார்கள்'

மட்டுவில், சனி

"கடந்தகாலத்தில் எமது அரசியற் தலைவர்களில், எவரெவர் தத்தம் கடமைகளை ஒழுங்காகச் செய்துள்ளனர். எவரெவருடைய செயல்களால் தமிழினத்தில் நன்மைகள் ஏற்பட்டுள்ளன. எவரெவருடைய செயல்களால் தீமைகள் ஏற்பட்டுள்ளன என்பதையெல்லாம் சகல கோணங்களிலிருந்தும் அலசி ஆராய்ந்து செயற்படவேண்டியது வாலிபர்களின் முக்கிய கடமையாகும்:"

இவ்வாறு மட்டுவில் தெற்கு வேதக்கேணி வட்டாரத்தில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி வாலிப முன்னணிக்கிளை அங்குரார்ப்பணக்கூட்டத்தில் பேசிய சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் கூறினார்.

வேதக்கேணி ஆலய வீதியில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு. எஸ். முத்திலிங்கம் தலைமை தாங்கினார். திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:

எம்மைப் பொறுத்தவரையில் பொதுமக்கள் அரசியல்விஷயங்களில்ஏனோ தானோ என்று அக்கறையற்று இருப்பது வருந்தத்தக்கது. அரசியல் அடிப்படையில் தான் எமது நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. இதில் நாம் இன்று அக்கறை காட்டத்தவறினால் அதன் முடிவு பாரதூரமானதாக அமையும். உயர்வை விரும்பும் எமது பொதுமக்கள் இந்த விஷயத்தில் முன்னோடியாக இருந்து சகல விஷயங்களையும் சகல கோணங்களிலிருந்தும் ஆராய்ந்தபின்னரே, அரசியல் தலைவர்களை எடைபோடவேண்டும்.

வேதக்கேணி தமிழரசு வாலிப முன்னணிக்கிளைத் தலைவராக திரு. எஸ். முத்துலிங்கமும் உபதலைவராக திரு. எஸ். பரமலிங்கமும், செயலாளராக திரு. என். அரியரத்தினமும், உபசெயலாளரக திரு. ரி. புவனேந்திரனும், பொருளாளராக திரு. பி. சேனாதிராஜாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# உள்ளூராட்சி அமைச்சருக்கு கோப்பாய் எம். பி. பாராட்டு

கோப்பாய் சனி

"நமது நாட்டின் அபிவிருத்திக்கென உள்ளூராட்சிப் பகுதியாரால் இலங்கை முழுவதிலும் தற்போது அமுலாக்கப்பட்டுவரும் பாலத்திட்டம், வீட்டுத்திட்டம் குறித்து உள்ளூராட்சி மந்திரியையும், அவரது இலாகா உத்தியோகத்தினரையும் பாராட்டவேண்டும். மேற்படி திட்டங்கள் நமது மக்களுக்கு மிகவும் பயன்படத்தக்கமுறையில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.'

புதுச்செம்மணி வீதியில் உள்ளூராட்சி அமைச்சரால் கோப்பாய்த்தொகுதிக்கென அமைக்கப்பட்ட புதிய பாலத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விழா கோப்பாய் கி. ச. தலைவர் திரு. தி. பரமானந்தராசா தலைமையில் நடைபெற்றது.

விழாவின் முன் இலங்கை நாயகி அம்மன் கோவிலடியிலிருந்து கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, கி. ச. தலைவர் திரு. பரமானந்தராசா, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. யோசேப் ஆகியோர் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டனர். ஊர்வலத்தில் சிறப்பு நிகழ்ச்சியாக சிலம்படி இடம்பெற்றது.

திரு. கதிரவேலுப்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் "இத்தகைய பாலங்களிலும் நமது நாட்டுக்கு இன்றியமையாத பாலமாக விளங்குவது மனப்பாலம். சமுதாயத்தை ஒற்றுமைப்படுத்தக்கூடிய விதத்தில் இம் மனப்பாலம் அமையவேண்டும். இதை மக்களே வகுக்கவேண்டும். மக்கள் மக்களோடு கலந்து வாழ்ந்திடவே இம் மனப்பாலம் தேவை. காந்திநூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந் நேரத்தில் இந்தியருக்கும் வெள்ளையருக்குமிடையே காந்திஜியால் அமைக்கப்பட்ட மனப்பாலத்தை நாம் சிந்தித்தல் அவசியம். அத்தகைய பாலமே நமக்குத் தேவை" என்றார்.

அடுத்து கோப்பாய்க் கிராமசபைத்தலைவர் திரு. பரமானந்தராசா தமது தலைமையுரையில் கூறியதாவது: "தமிழினமும் சிங்கள இனமும் ஒன்றுபட்டு ஒற்றுமைப்பாலம் அமைத்தால் எத்தனையோ சிறந்தசாதனைகளை நாம் சாதித்து நாட்டின் பொருளாதாரத்துக்கும் சுபீட்சத்துக்கும் வழி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வதற்கு அமெரிக்க அரசாங்கம் ஊக்கமளித்து வருவதாக ஐ நா.வின் பாதுகாப்பு சபையிடம் ஐக்கிய அரபுக் குடியரசு புகார் செய்திருக்கின்றது.

அமெரிக்கர்கள், தமது அமெரிக்க பிரஜாஉரிமையைத் துறக்காமலே இஸ்ரேலிய ராணுவங்களில் சேர்வதற்கு ஊக்கமளித்துவருவதின் மூலம் ஐ. நா. சாஸனத்துக்குவிரோதமாகஅமெரிக்கா நடந்துகொள்கிறது என்று ஐக்கிய அரபுக்குடியரசு குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

படைகளில் சேர்ந்துகொண்டிருக்கவில்லையென்றும் ஒரு சில தொழில்நுட்ப நிபுணர்கள் தனிப்பட்ட முறையில் அங்கு தொழில் நடத்திவருவதாகவும் அந்த அதிகாரி கூறினர்.

நேற்று ஜோர்டானுக்கும் இஸ்ரேலியருக்குமிடையில் நடைபெற்ற பலத்த மோதல்களில் நான்கு இஸ்ரேலியர் காயமடைந்ததாகக்கூறப்படுகின்றது. ஆனல் ஜோர்டானியர் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லையென்று கூறினர்.

வேலணை, சனி

வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலையில் இருந்து ஆசிரியர்களை ஒவ்வொரு மாதமும் இடமற்றம் செய்வதால் இப் பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகளின் கல்வித்தரம் வெகுவாகப் பதிக்கப் படுகிறது எனவே இப்பிள்ளைகளின் கல்வித் தராதரம் பாதிக்காதவாறு வருடம் ஒருமுறை ஆசிரியர் மாற்றத்தைக் கைக்கொள்ளும்படி கல்விமா அதிபரையும் தீவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினரையும் கோரும் தீர்மானம் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## ஜனத் தொகை

கோட்டை, சனி

இலங்கையின் ஜனத்தொகை ஒவ்வொரு வருடமும் 2,80,000 பேரால் அதிகரித்துக்கொண்டு வருகிறது இலங்கை குடும்பக் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் 1968-1969-ம் ஆண்டு புள்ளி விபரப்படி இலங்கையின் ஜனத்தொகை 12 225,000 ஆகவுள்ளது.

2.4 வீதப்படி அதிகரித்துக் கொண்டுவரும் ஜனத்தொகையைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாவிடில் 29 வருட காலப்பகுதிக்குள் இருமடங்காகிவிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்கான ஆக்கவேலைகளையும் சீர்திருத்தப்பணிகளையும் செய்வதிலும் செய்யத் தூண்டுவதிலும் இளைஞர்கள் ஒன்ருக இணைந்து ஒரு கழகமூலம் கருத்துக்களை வெளிப்படுத்துவதைத் தவிர்த்து பல கழககங்கள் தோன்றி தாம் எடுத்துக் கொண்ட விஷயம் சரியா அல்லது பிழையா என ஆராயாது விரும்பும் போக்கிலெல்லாம் தனித்தனியே செயலில் ஈடுபடுவதில் அர்த்தமில்லை.

மேற்கண்டவாறு அடுத்தடுத்து தோன்று கழகங்கள் பற்றி வேலணை கி. ச. தலைவர் திரு. க. சதாசிவம் நமது நிருபரிடம் கருத்து வெளியிட்டார்.

சங்க ஆதரவில் பண்டிதர் க. வீரகத்திஎழுதிய 'பொது அறிவுப் பூங்கா' என்னும் நூலை வெளியிட்டு வைத்துக் கூறினர்

''இன்று கல்வித்துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கலை. விஞ்ஞானம் என ஒன்றேடொன்று தொடர்பற்றிருக்கிறது. கலைப்பாடங்கள் பயிலுபவர்களுக்கு விஞ்ஞானம் சிறிதும் தெரியாது அதேபோல விஞ்ஞான மாணவருக்கு கலைபற்றிய அறிவு இல்லை. இந்நிலையை நீக்கி, கலையைப்பற்றியும். விஞ்ஞானத்தைப் பற்றியும். அரசியல், சமயம், புவியியல் ஆகியன பற்றியும் அறிய இதுபோன்ற நூல்கள் பல

னந்தராசா தலைமையில் நடைபெற்றது.

விழாவின் முன் இலங்கை நாயகி அம்மன் கோவிலடியிலிருந்து கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, கி. ச. தலைவர் திரு. பரமானந்தராசா, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. யோசேப் ஆகியோர் ஊர்வலமாக அழைத்

வெளிவரவேண்டிய தவசியம்'' என திரு. சிவராஜசிங்கம் சொன்னர்.

பண்டிதர், சைவப்புலவர் திரு. பொன் கணேசன் பண்டிதர் குகவைரவனர் பண்தர் வீ.பரந்தாமன் ஆகியோரு உரையாற்றினர்.

கிராமசபைத்தலைவர் திரு. பரமானந்தராசா தமதுதலைமையுரையில் கூறியதாவது: ''தமிழினமும் சிங்கள இனமும் ஒன்றுபட்டு ஒற்றுமைப்பாலம் அமைத்தால் எத்தனையோ சிறந்தசாதனைகளை நாம் சாதித்து நாட்டின் பொருளாதாரத்துக்கும் சுபீட்சத்துக்கும் வழி காண முடியும். நமக்குள் இருக்கும்சிக்கல்கள், பெருங் கஷ்டங்கள் நிவிர்த்தியாக்கலாம். இன்று அரசாங்கத்தினுல் நடாத்தப்படும் இத்தகைய வேலைத்திட்டங்களால் நாட்டின் பொருளாதாரமும், விவசாயமும் மிகவும் முன்னேற வழி

(4-ம் பக்கம் பார்க்க)

ஐ. நா. பொதுச்சபையில்

# தென் ஆபிரிக்காவை கண்டிக்க கோரிக்கை

வாஷிங்டன் அக்.18

தென் ஆபிரிக்காவைக் கண்டிக்கும் படி ஐ. நா. பொதுச்சபையிடம் 56 நாடுகள் வற்புறுத்தியுள்ளன.

ஐ.நா. பாதுகாப்புச்சபை தீர்மானங்களை அலட்சியம் செய்வதற்காக தென் ஆபிரிக்காவைக் கண்டிக்கும்படி இந்த நாடுகள் கேட்டிருக்கின்றன.

மேற்கு ஆபிரிக்காவிலிருந்து விலகிப் போகும்படி ஐ. நா பாதுகாப்புச்சபை தென் ஆபிரிக்காவைக் கேட்டிருந்தது. ஆனல் அங்கிருந்து தான் விலகிப் போவதால் அப் பகுதியில் அமைதியின்மை ஏற்படும் என்று கூறி தென்ஆபிரிக்கா மேற்காபிரிகாவிலிருந்து விலகிச் செல்ல மறுத்து விட்டது. தென் ஆபிரிக்காவின் இந்தப் போக்கை கண்டிக்கும்படி இந்த 56 நாடுகளும் கூட்டாக ஐ. நா. பொதுச் சபையைக் கேட்டிருக்கின்றன.

பொலிவியாவில்

## யு.எஸ்.கம்பனியை அரசு எடுத்தது

நியூயோர்க், அக்.18

பொலீவிய புரட்சி அரசாங்கம் அங்குள்ள பெரிய அமெரிக்கா எண்ணெய்க் கம்பனியை தேச உடைமையாக்கியுள்ளது. இந்தக்கம்பனியை முதலில் ராணுவத்தினர் சூழ்ந்துகொண்டனர். அதன் பின்னர் அக்கம்பனி தேசியமயமாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்தக்கம்பனிக்குஉரித்தான இதர உடைமைகளையும் பொலீவிய அரசு தேசியமயமாக்கிவிட்டது.

## மொரோக்கோவில் காந்தி முத்திரை

றபார்ட், அக். 17

மகாத்மா காந்தியின் 100-வது பிறந்ததினத்தை முன்னிட்டு மொரோக்கோ, மகாத்மாவின் உருவம் பொறித்த தபால் தலை ஒன்றை வெளியிடவுள்ளது

இதற்கான ஏற்பாடுகள் யாவும் மேற்கொள்ளப் பட்டுவிட்டதாக மொரோக்கோ தபால்பகுதி அறிவித்துள்ளது.

## கட்சியை உடைக்கிருராம் காமராஜர்

பாட்ன, அக்.18

'காங்கிரஸ் கட்சியை உடைப்பதற்காகவே காமராஜர்புதிய தொடு இயக்கத்தைஆரம்பிக்கிருர்.'

தென்னட்டில் புதிய இயக்கமொன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற காமராஜரின் கருத்துப்பற்றி ஒரு அறிக்கை வெளியிட்ட பீகார் மாநிலகாங்கிரஸ்தலைவரான ஏ.பி.சர்மா தனது அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது: 'காங்கிரஸ் கட்சியில் உயர் பதவியில் இருக்கும் பொழுதே 1967-ம்ஆண்டுத் தேர்தலில் தனது சொந்த மாகாணத்தில்தோல்வியுற்ற காமராஜர் தென்னட்டில் புதிய இயக்கமொன்றை ஆரம்பிப்பது சரியல்ல அவர் முதலில் தனதுகடும் உழைப்பினுல் தமிழ்நாட்டில் கட்சியின் கெளரவத்தைமீட்க வேண்டும்.

டில்லியில் ஆட்சிமன்றத் தோன்றுகிறது.'

காங்கிரஸ் கட்சி நெருக்கடி

# 'சின்டிகேட்' மந்திரிகளுக்கு சீட்டுக்கிழியும்? நிஜலிங்கப்பாவுக்கு எதிராக கையெழுத்து வேட்டை

புதுடில்லி, அக். 18

இந்திரா மந்திரிசபையில் மூத்த மந்திரிகள் சிலரும் பதவி இழக்கக்கூடும் என்று அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

ஏற்கனவே சின்டிகேட் ஆதரவாளர்கள் என்று கூறப்படும் நான்கு உபமந்திரிகளை பிரதமர் இந்திரா பதவியிலிருந்து நீக்கியிருக்கிருர்.

காங்கிரஸ் காரியக் கமிட்டியில் பிரதம மந்திரிக்கு சாதகமானவர்களையெல்லாம் தலைவர் திரு நிஜலிங்கப்பா நீக்கிவிடுவதற்கு முயற்சி எடுத்துவருவதால் மந்திரிசபையில் தனக்கு எதிரானவர்களையெல்லாம் பிரதமர் இந்திரா 'களை'யெடுக்கத் தொடங்கியிருக்கிருர் என்று கூறப்படுகின்றது.

### ஏன் செய்தார்

மந்திரிசபையிலிருந்து நான்குஉபமந்திரிகள் விலக்கப்பட்டது பற்றி திரு நிஜலிங்கப்பாவிடம் நிருபர்கள் கேள்வி கேட்டனர்.

''பிரதம மந்திரி இதனை ஏன் செய்தார் என்பதையே அனைத்தும் பொறுத்திருக்கின்றது. தம்முடன் அவர்கள் சிலகாலம் பணியாற்றியிருக்கிருர் என்பதை அவர் கண்டிருக்கிருர். அவர்கள் பதவியில் நீடிப்பது மந்திரி சபையின் இசைவான ஆக்கரீதியான போக்குக்கு ஏற்றதாக இல்லையென்று பிரதம மந்திரி கருதுவாரானல் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கலாம். பழிவாங்கும்நடவடிக்கையாக இருக்குமானல் இதனை நான் விரும்பவில்லை. ஏனெனில் இது ஐக்கிய தீர்மானத்தை பாதிக்கிறது'' என்று திரு. நிஜலிங்கப்பா பதில் கூறினர்.

காங்கிரஸ் ஒரு ஜனநாயக ஸ்தாபனம் எதேச்சாதிகாரத்தை அது சகித்துக்கொண்டிராது கருத்துவேறு பாடுகள் அனைத்தையும் மறந்துவிட்டு நாட்டின் நலனுக்காக பாடுபடுவதேஇன்றைய தேவை என்று திரு. நிஜலிங்கப்பா கூறினர்.

தில் இருப்பவர்களையும், பிரதமர் இந்திராவையும் குறைகூறிவருகிருர் இவ்வாறு இவர் குறைகூறுவதால் காங்கிரஸ் கட்சியை மேலும் பிளவுபடுத்துகிருர் என்பது புலனுகிறது. இவரின் செயல்களையெல்லாம் பார்க்கும் போது அரசியலில் ஏமாற்றமடைந்தவர் போன்று

### காரியக்கமிட்டிக் கூட்டம்

இம்மாதம் 30-ம் திகதி காங்கிரஸ் கூட்டம் நடப்பதாக இருந்தது. பிரதம மந்திரியின் செளகரியத்தை உத்தேசித்து நவம்பர் 1-ம் திகதிக்கு தள்ளிவைக்கப்பட்டிருப்பதாக திரு. நிஜலிங்கப்பா கூறினர்.

### கையெழுத்து சேகரிப்பு

திரு நிஜலிங்கப்பாவைத் தலைவர்பதவியிலிருந்து நீக்குவதற்கு கையெழுத்துவேட்டையில் பிரதம மந்திரியின் ஆதரவாளர்கள் ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது இதற்காக அ. இ. கா.வின் விசேஷக் கூட்டத்தைக் கூட்டும்படி அவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிருர்கள். இதுபற்றி திரு. நிஜலிங்கப்பா கூறுகையில் கையெழுத்து இயக்கத்தை அவர்கள் நடத்தட்டும் காங்கிரசுக்கு எதிராக நான் எதுவும் செய்யவில்லை. அவசியமில்லாமல் என்மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது என்றுர்.


இதற்கிடையில் திரு. சுப்பிரமணியத்துக்கு மீண்டும் மத்திய அமைச்சில் மந்திரி பதவியொன்றை பிரதம மந்திரி கொடுப்பதுபற்றி ஆலோசித்துவருவதாகக் கூறப்படுகிறது.


# ஹெடோனல்



களைகளை ஒழித்து, பயிர்களைக் காத்து, வருவாயைப் பெருக்கும்

BAYER ®



ஹெடோனல் அதிசிறந்த களைகொல்லி / வயல்களில்-குறிப்பாக நெல்வயலில்-தலைதூக்கும் சகல அகன்ற இலைக் களைகளையும், சிக்கனமாக, உடனடியாக, முற்ருக, அழித்தொழிக்க வல்லது ஹெடோனல்! நெல்வயலில், விதைத்து 3-7 வாரத்துள் அதைப் பாவிக்க வேண்டும்.

ஹெடோனல், விளைச்சலை வெகுவாகப் பெருக்கும்.

அது இரண்டு ரகங்களிற் கிடைக்கும்.

ஹெடோனல் "எம்" - 40% எம். சி. பீ. ஏ. கொண்டது.

ஹெடோனல் "டீ" - 55% 2.4 டீ கொண்டது

சிக்கனமாக, சிறப்பாகப் பயிர்களைக் காப்பது -ஹெடோனல். அது, களவு செய்ய முடியாத போத்தலிற் கிடைக்கும்.

உற்பத்தியாளர்:
பேயர்
லீவர்கூசன்
மேற்கு ஜெர்மனி

இலங்கையில் விநியோகஸ்தர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

பலவீனமானவர்கள் ஒருபோதும் மன்னிப்பது கிடையாது. மன்னிப்பதுதான் என்பது பலசாலிகளுடையஇயல்பு. மன்னிப்பது போர் வீரனின் ஆபரணம். — மகாத்மா காந்தி


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஐப்பசி மாதம் 3-ந் திகதி (19-10-69)


## வகுப்புவாத ஆபத்து

வகுப்புவாதப் பிரச்னையை மீண்டும் கிளப்பி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்வோர் பற்றி எச்சரிக்கையாகஇருக்க வேண்டுமென்று பிரதமரும் மற்றும் சிலரும் வேண்டுகோள் விடுத்துவருகின்றனர். குறுகிய வழியில் அரசியல் ஆதாயம் பெறுவதற்காக அரசியல்வாதிகள்தான் வகுப்புவாதத்தைத் தூண்டி விடுகிறார்கள் என்று அவர்கள் மீது மட்டும் குற்றம் சுமத்திவிடமுடியாது. அரசியல் இலாபத்தை அடிப்படையாகக்கொண்டு அரசியல் வாதிகளும் அரசியல் கட்சிகளும்எப்படிப் போட்டி போட்டுக்கொண்டு வகுப்புவாத உணர்ச்சிகளைத் தூண்டி விடுகின்றனரோ அதைவிட மோசமாகபொறுப்புவாய்ந்த செல்வாக்குள்ள சில பத்திரிகைகளும் வியாபார நோக்கத்துடனே வேறு எந்த நோக்கத்துடனே வகுப்புவாதத்தைத் தூண்டி விடும் செய்திகளையும் பேச்சுக்களையும் பெரிதுபடுத்திப் பிரசுரிப்பதுடன் வகுப்புவாதத்தைத் தூண்டிவிடக் கூடிய முறையில் எழுதியும் வருகின்றன. பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னைய அரசாங்கம், அரசியல் காரணங்களை அடிப்படையாகவைத்து, முயற்சிகளை மேற்கொண்டபோது, ஜனநாயகத்தின் ஆணிவேரான பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிப்பது ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைப்பதாகுமெனக் குரல் எழுப்பிய பத்திரிகைகள் இன்று பத்திரிகைச் சுதந்திரத்தையே துஷ்பிரயோகம் செய்யலாமா?

‘லேக்ஹவுஸ்’ என்ற ‘ஏரிக்கரை’ ஸ்தாபனமும் பல மொழிகளிலும்பலபத்திரிகைகளை வெளியிடுகிறது. இந்த ஸ்தாபனம் வெளியிடும், ஒரு சிங்கள மொழி வாரப் பத்திரிகை தென்கிழக்காசியாவிலேயே பெரும் தொகையான பிரதிகள் விற்பனையாகும் சுதேசிய பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பிள்ளைகள் பெருமளவில் அனுமதிக்கப்பட்டு வருவதாகவும் இதனால் பேராதனைப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பல்கலைக்கழகமாகி விடுமென்றும் சிங்களப்பிள்ளைகளுக்கு இடமில்லாமல் போய்விடுமென்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் சிலரும் இது பற்றி அச்சம்கொண்டிருப்பதாகவும் அந்தச்செய்தி கூறுகிறது.

மிகக் கடினமான பரீட்சைகளில் தேறியவர்களே பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். அப்படியிருந்தும் தமிழர்கள் அங்கு படையெடுப்பதாகக் கூறுவது நியாயமாகுமா? தமிழ் மாணவர்கள் இம்முறை மிக மிகக் குறைவாகவே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தகுதியும் திறமையுமுள்ள மாணவர்கள் அவர்கள். எந்த இனத்தையும் மதத்தையும் சார்ந்தவர்களாயிருந்தாலும் அவர்கள் உயர்கல்வி பெறுவதற்கு வசதிசெய்யப்பட வேண்டும். இதுதான் நியாயம். இந்த நீதி நியாயமே மறுக்கப்பட்டுள்ளபோது அதைத் தட்டிக்கேட்டு மனித உரிமையை நிலைநாட்டவேண்டிய செல்வாக்கும் பொறுப்புமுள்ள சில பத்திரிகைகளே வகுப்புவாதத்தைத் தூண்டிவிடக்கூடிய முறையில் செய்திகள் வெளியிடுவது நாட்டுக்கு நல்லதா?

தகுதியும் திறமையுமுள்ள தமிழ் மாணவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கச் சென்றதும், அங்குள்ள மற்ற மாணவர்களும் மற்றையோரும் தமிழ் மாணவர்கள் மீது குரோத மனப்பான்மையுடன் நடந்துகொள்வதற்குத்தான் இதுபோன்ற செய்திகள் உதவிபுரியும்.

வேறு சில சிங்கள, ஆங்கில பத்திரிகைகளும் கூட இதே கைங்கரியத்தைச் செய்துவருகின்றன. வகுப்புவாத உணர்ச்சியைத் தூண்டி விடுவதால் தான் அவைகங்கள் விற்பனையும் அதி...

# ஊமைக் காளிதாசனைக் கவிஞனுக்கிய கலைவாணியை பாடிப்பரவும் நன்னாள் இந்தநாள்

நமது உலக வாழ்க்கைக்கு கல்வி செல்வம், வீரம் என்பன இன்றியமையாததாக விளங்குகிறது. இவற்றுள் ஒன்று இருந்தாலே நன்றாக வாழலாம் எனவும் நினைக்கிறார்கள் மக்கள் அது தவறு. பணமுள்ளவன் வீரம் கல்வி இரண்டையும் பெற்றுவிடலாம் என நினைக்கிறான். வீரமுள்ளவன் வீரத்தினால் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என நினைக்கிறான். ஆனால் கல்வியறிவுள்ளவன்தான், செல்வம், வீரம் இரண்டையும் தனது புத்தி விவேகத்தினால் பெற்றுக்கொள்ளமுடியும் ஆத்மீக வாழ்வுக்கும் கல்விதான் சிறந்தது. கல்வியுள்ளவனுக்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு.

கல்வியின் சிறப்பை உணராத மக்கள் அந்தக் கல்வியறிவுடைய பெரியார்களை வரவேற்பதில்லை. ஆதிகாலத்தில் பெரும் கல்விகேள்விகளில் சிறந்து விளங்கிய புலவர்களைப் புரவலர்கள் ஆதரித்தார்கள். அதனால் அவர்கள் வறுமையால் பாதிக்கப்படவில்லை. நாளாவட்டத்தில் அரசர்களின் ஆதரவுகுன்ற புலவர்களின் புலமையைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளவில்லை. அவர்களை ஆதரிக்கவும் தவறினால் பொதுமக்களிடையே கல்வியறிவுடையவர்களிடம் லக்ஷ்மி குடிகொள்ளமாட்டாள் என்ற தவறான நம்பிக்கை நிலவுகிறது. அதற்கு அவர்கள் சொல்லும் பழமொழி என்ன தெரியுமா? ஒரு வீட்டில் இரு பெண்கள் ஒற்றுமையாக இருக்கமாட்டார்கள் என்பதுதான். இருவருக்கிடையில் பூசல் ஏற்பட்டுவிடும் என்று இப்பிழையானகொள்கைகளைப் பொதுமக்களிடையே பரவவிடாமல் தடுப்பதற்கு சிறந்த வழி கல்வி செல்வம், வீரம் இம்மூன்றிற்கும் அதிபதிகளாகவிளங்கும சரஸ்வதி, லக்ஷ்மி துர்க்கை ஆகிய தெய்வங்களை உள்ளன்போடு வழிபடுதலேயாகும்.

### காளிதாசனைக் கவிஞனுக்கிய சக்தி

காளிதாசர்இவர் ஊமைப் ...

... விரித்தபோது வால்மீகி ராமாயணமே இருந்தது கண்டு அரசன் காளியின் அருள் எனத் தெளிந்தான்.

### கலைவாணி அருள்பெற்ற கம்பர்

அடுத்து கம்பர்,இவர் கலைவாணியை உள்ளன்போடு வழிபட்டு வந்தார். அதனால் பல இக்கட்டான நிலைகளில் கலைவாணியே கை கொடுத்து உதவினாள். ஒரு முறைகுலோத்துங்கசோழன் ஒட்டக் கூத்தரையும் கம்பனையும் இராமாயணத்தை பாடும்படி பணித்தான் கூத்தர் ஆறுகாண்டம் பாடி கடல்காண் படலத்தில் நிறுத்தியுள்ளதாகக் கூறினார். கம்பரோ காப்புக்கூடப் பாடவில்லை. ஆனால் கூத்தரை விடத் தான் கூடப் பாடியதாக சொல்லவிரும்பி கடல்காண் படலத்திலுள்ள திருவணைப்படலம் வரை பாடிவிட்டதாகப் பொய் சொன்னார். மன்னர்உடனே சம்பனைப்பார்த்து புலவர் பெருந்தகையே தாங்கள் பாடிய கடைசிப் பாட்டை கேட்க விரும்புகிறேன்என்று சொன்னதும் கம்பர் கலைவாணியை மனதில் துதித்துக்கொண்டு,

> குமுதனிட்ட குலவரை கூத்தரில்
> திமிதமிட்டுத் திரியும் திரைகடல்
> துமிதமூர்புக வானவர் துள்ளினார்
> அமுதமின்னும் எழுமெனும் ஆசையால்

என்ற பாடலைப் பாடிக்குமுதன் என்கிற வானரம் ஒரு குன்றை தன் கையில் பந்தாடி தெய்வதச்சனாகிய நளன் கையில் கொடுக்காமல் தானே சமுத்திரத்தில் வீட்டெறிய அம்மலையானது சமுத்திரத்திலே விழுந்து கூத்தாடிகள் போல் குதித்து சுழலும்போது நீர்த்திவலைகள் நுரைத்து விசையுடன் மேலெழும்போது வானவர்கள் மீண்டும் அமிர்தம்வருகிறது என்று துள்ளினார்கள் என்ற பொருளைக் கூறினார்.

உடனே ஒட்டக் கூத்தர் கம்பனைப்பார்த்து துளியைத் துமி என்று பாடியுள்ளீர் இது சொல்வழு எனக் கூறினார். கம்பர் இது இலக்கியங்களில் எழுத்தாளப்படாவிடினும் உலகியல் வழக்கு எனக் கூறினார். உலக வழக்கானால் அதனை மெய்ப்பிக்க வேண்டும் என்றார். கம்பர் வாணியை வேண்டினார் அவரும் கம்பரை இடைச்சேரிக்கு வரும்படி அசரீரியாகக்கூறினார். அவர் தம் கூற்றை மெய்ப்பிக்க கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரும் புவிச் சக்கரவர்த்தியாகிய அரசனும் ஒட்டக் கூத்தருமாக அதி காலையில் இடைச்சேரிக்குச் சென்றனர். ஒரு பாழடைந்த வீட்டில் கலைவாணி கிழவியாகவும் வேதமே தயிர்த் தாழியாகவும் வேதாந்தமே தயிராகவும், சாஸ்திரமே மத்தாகவும் இதிகாசபுராணங்களே பிள்ளைகளாகவும் மாறிவந்து தமது திருக்கரத்தால் தயிரைக் கடைந்தனள் அன்னை கலைவாணி. அச்சமயம் மூவரும் அவ்விடத்துக்கருகே சென்றனர். பிள்ளைகளே உங்கள் மீது மோர்த்துமி தெறிக்கும்எட்ட இருங்கள் என எல்லோர்காதிலும் கேட்கும்படி இந்த வாசகம் எழுந்தது இதுகேட்ட கூத்தர் அதிசயமும் ஆத்திரமும் ஒருங்கே அமைய இந்த வீட்டில் ஒருவரும் வாழ்ந்தது கிடையாது பார்த்துவருகிறேன் என உள்ளே நுழைந்து அவ்விடம் யாரையும் காணாமையால் இது சாரதையின் திருவிளையாடல் என அறிந்து கம்பரை வணங்கினார்.

கலைவாணியை நாம் உள்ளன்போடு வழிபட்டால் அவள் எம்நாவில் நின்று நர்த்தனம் புரிவாள். உலகம் ஆண், பெண் என்ற இருபாலாரையும் கொண்டே இயங்குகிறது என்னும் உண்மையை மெய்ப்பிப்பது போல் சக்தியானவள் இந்த ஒன்பது நாளும் விரதம் அனுட்டித்துத் தனது சக்தியை எல்லாம் ஒன்றுதிரட்டி சமர்ப்பிக்க சிவன் பத்தாம் நாள் வன்னி மரமாக மறைந்து நின்ற மகிஷாசுரனை வதைத்து சீவராசிகள் யாவரையும் உய்விக்கிறார். எல்லா ஆலயங்களிலும் வன்னி மரத்துக்குப் பதிலாக கன்னி வாழையை நாட்டி ‘வாழை வெட்டு’ எனும் விழாநிகழ்ச்சியினை நிகழ்த்தி வருகிறார்கள்

இதேநாளில்தான் அர்ச்சுனனும் அஞ்ஞாதவாசம் முடித்து வன்னிமரத்திலே தான் ஒழித்து வைத்திருந்த ஆயுதங்களை எடுத்து போர் தொடுத்து வெற்றியும்ஈட்டினான். ஒன்பதாம் நாள் ஆயுதங்களைப் பூசையில் வைத்து அன்னையின் முழுசக்தியையும் ஏற்றபின் வ்வாயுதங்கள் கொண்டு தொழில் செய்வோமயின் வெற்றி நமதே

**விமலி**

# பேராதனைப் பல்கலைக்கழகம் தமிழர்வசமாகப் போகிறதாம்

## ‘லேக்ஹவுஸ்’ பத்திரிகை கூற்று

‘பேராதனையிலுள்ள [illegible] லங்கா பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகமாக ... [illegible] னும் யாவரும் பல்கலைக்கழகம் முழுவதும் தமிழருக்கு அடிமையாகும் தினம் ... யுள்ள தமிழ் மாணவர் எல்லோரும் பேராதனையில் சேர்க்கப்படவேண்டியிருப் ...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐயாறன் எழுதுவது

குன்றக்குடி அடிகளாருக்கு ஈழத்திலே பாலில் விஷம் கலந்து கொடுக்கப்பட்டதா? அப்படித்தாம் கூறவில்லை என்று திருகோணமலை பொதுக் கூட்டத்தில் அடிகளார் பகிரங்கமாகத் தெரிவித்தார். திருக்குறளை விளக்க ஓர் உதாரணக் கதையாகவே அவர் நஞ்சுகலத்தலைப் பற்றி கூறியதாக முதலியார் சின்னத்தம்பி அவர்கள் கூறியதை இப்பத்தியில் சில நாட்களுக்குமுன் வெளியிட்டேன்.

ஆனால் அடிகளார் ஈழத்திலிருந்து தமிழகம் திரும்பியதும், அங்கு ஒரு பத்திரிகைக்கு அளித்த ‘பேட்டி’யில், நல்லூரிலே தமக்குக் கொடுக்கப்பட்ட பால்நிறம் மாறியிருந்ததாகவும் அதனால் சந்தேகப்பட்டு பால் சாப்பிட மறுத்ததாகவும் குறிப்பிட்டதாக அப்பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது. இதைப் படித்துவிட்டு, இங்கு அடிகளாரின் அன்பர்கள் உள்ளிட்டு பலருக்கும் வியப்பும் வேதனையும் அளித்திருக்கின்றது அந்தப்பத்திரிகை கூறியிருப்பது தவறா? அல்லது அடிகளார் அப்படிச் சொன்னாரா?

இது சாதாரண அற்ப விஷயமல்ல. ஈழ மக்களின நற்பெயரையே பாதிப்பதாகும். திருகோணமலையிலே இச்செய்தி தவறு என்றும் தாம் அப்படிக் கூறவில்லை என்றும் மறுத்த அடிகளார் தமிழகம் திரும்பியபின், அதற்கு மாறாகக் கூறியிருப்பாரென்று நம்பமுடியவில்லை.

மேலும் பால்நிறம் மாறியிருந்தது உண்மையாயின், அதில் விஷம் இருக்கிறதா என்று பரீட்சித்ததாகத் தெரியவில்லை. அப்படி எதுவும் பரீட்சை செய்யாமல், தமக்கு விஷமிட முயற்சி செய்யப்பட்டதாகஅவர்கூறியிருப்பாரென்று நம்பமுடியவில்லை.

ஆனால் நல்லூர் கூட்டத்திலே அவர் இப்படிச் சொன்னது உண்மையே என்றும், அவர் பேச்சை ‘டேப்ரிகார்ட்’ செய்துள்ளதாகவும் ஓர் அன்பர் தெரிவித்தார். யாழ்ப்பாண பொலிசாரும் இதைப்பற்றி விசாரித்து வருவதாகவும், அந்த ‘டேப்ரிகார்ட்டை’ பொலிஸ் அதிகாரியும் கேட்டுள்ளதாகவும் அறிகிறேன்.

இவ் விஷயமாக முரண்பட்ட செய்திகள் வெளியாகி, மக்கள் மனதைக் குழப்புவதாலும், ஈழத்தைப் பற்றி தவறான கருத்துக்கள் தமிழகத்தில் பரவுமாதலாலும், குன்றக்குடி அடிகளார் இவ்விஷயத்தைப்பற்றி தெளிவான ஓர் அறிக்கையை வெளியிட்டால்தான் இதுபற்றிய பலபல தப்பெண்ணங்களும் நீங்கும். இங்குள்ள அவரது அன்பர்கள், இம்முக்கிய விஷயத்தைப்பற்றி அவருக்குஎழுதி, அவரது தெளிவான அறிக்கையை தமிழகத்தில்மட்டுமன்றி ஈழத்திலும் வெளியிடச் செய்யவேண்டியது அவசரமும் அவசியமுமான காரியமாகும்.

0 0 0

சென்னை மயிலாப்பூர் கபாலிச்வரர் திருக்குளம் நீரில்லாமல் வரண்டிருக்கிறதாம். அடியிலுள்ள அழுக்குகளை தூர் எடுக்கவேண்டுமென்று சென்னை ‘இந்து’ பத்திரிகையில் கடிதமெழுதியிருந்தனர். தண்ணீர்வந்துவிட்டால் அழுக்குகள் அப்படியே இருக்கும்தானே.

இதைக் கண்டு, தமிழகத்தின் முதல் அமைச்சர் கருணாநிதியின் தலைமையில் சிரணிப்படையினர், அந்தக் குளத்தை சிரமதானமூலம் சுத்தம் செய்வதாக ஒரு செய்தியைப் படிக்க மிக மகிழ்ச்சியாக இருந்தது.

தெய்வ நம்பிக்கையற்றதாகக் கருதப்படும் ஒரு கட்சியின் தலைவர் கோவில் குளத்தை சுத்தம் செய்ய முற்பட்டது வரவேற்கத்தக்கதுடன் மற்ற ஆஸ்திகர்களுக்கும் முன்மாதிரியான ஒரு செயலாகும்.

தமிழகத்தில் மதுவிலக்கு நீடித்திருக்குமென்றும்அதை அகற்றப்போவதில்லை என்றும் மற்றொரு நல்ல செய்தி தெரிவிக்கின்றது. தலைமை அரசாங்கத்திடமிருந்து அதிக நஷ்டஈடுப் பணம் பெறுவதற்காகவே முதல் அமைச்சர் இந்தப் பூச்சாண்டியைக் காட்டியதாகவும் சொல்லப்படுகிறது. இது எப்படியாயினும், தமிழகத்திலே தி. மு. க. ஆட்சியாளர், மதுவிலக்கைத்தொடர்ந்து நடத்துகையில், ஆந்திராவிலே காங்கிரஸ் ஆட்சியாளர், நவம்மர் மாதம் மதுபானக்கடைகளைத் திறக்கத் தீர்மானித்துள்ளது, பொதுமக்களிடையே தி. மு. க. வின் மதிப்பை உயர்த்தி, காங்கிரஸின் மதிப்பைத் தாழ்த்தச் செய்யும்.

...ருது முன்னேறுவோம். இன்று முற்போக்கு அணி ...

கரை' ஸ்தாபனமும் பல மொழிகளிலும்பலபத்திரிகைகளை வெளியிடுகிறது. இந்த ஸ்தாபனம் வெளியிடும், ஒரு சிங்கள மொழி வாரப் பத்திரிகை தென் கிழக்காசியாவிலேயே பெரும் தொகையான பிரதிகள் விற்பனையாகும் சுதேசிய மொழிப் பத்திரிகையாகும். மூன்று இலட்சத்துப் பத்தாயிரம் பிரதிகள் வாரத்தில் விற்பனையாகின்றதாம் அந்தப் பத்திரிகையின் நேற்றைய இதழின் முதற்பக்கத்தில் பெரிய கொட்டை எழுத்துக்களில் சிவப்புக்கலரில் தலைப்புச் செய்தியொன்று வெளிவந்திருந்தது. "பேராதனை தமிழருக்குப் போகுமா? எதிர்காலம் பற்றிப் பீதி" என்பதுதான் அந்தத் தலைப்பு அந்தப் பெரிய எழுத்துத் தலைப்புக்கு மேலே இரண்டு வரியில் கவிதா நடையில் வசனங்கள். "தமிழ் மாணவர் அனைவரும் இங்கு வந்ததும் சிங்களப்பிள்ளைகள் போவரோ வெளியே" என்பது அதன் தமிழ் அர்த்தம். பேராதனைப் இதுபோன்ற செய்திகள் உதவிபுரியும்.

வேறு சில சிங்கள, ஆங்கில பத்திரிகைகளும் கூட இதே கைங்கரியத்தைச் செய்துவருகின்றன. வகுப்புவாத உணர்ச்சியைத் தூண்டிவிடுவதால் தான் அவை தங்கள் விற்பனையை அதிகரித்துக் கொள்கின்றன போலும். ஆனல் நாட்டின் கதி என்ன?

தேசியஅரசாங்கம் ஆட்சிக்குவந்தபின், பத்திரிகைகள் தாங்களே தமக்குக் கட்டுப்பாடு விதித்துத் தணிக்கை செய்துகொள்ள வேண்டுமெனப் பிரதமர் சில தடவைகளில் கருத்துவெளியிட்டிருந்தார். ஆயினும் அதற்கு அந்தப் பத்திரிகைகள் செவி சாய்த்ததாகத் தெரியவில்லை வகுப்புவாதத்தைத் தூண்டும்முறையில் செய்திகளை வெளியிட்டும் எழுதியும் நாட்டின் அமைதியைக் குலைக்கமுயல்வோர்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காவிடில் இலங்கை சீரழிந்து அடிமைப் பட்டுவிடும்.

## சிறந்த டாக்டர்கள், தாதிகளுக்கு தங்கப்பதக்கம்

கோட்டை, சனி

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சிறந்தசேவையாற்றும் டாக்டர்களுக்கும்தாதிகளுக்கும் பதக்கங்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சின் உதவி அமைச்சர் திருமதி விமலா கன்னங்கராவின் மேற்படி தீர்மானத்தைச் சுகாதார அமைச்சர் அங்கீகரித்துள்ளார்.

ஒவ்வொரு அரசாங்க வைத்தியசாலையிலும் மிகத் திறமையாகக் கடமையாற்றிய டாக்டர், சத்திர சிகிச்சை நிபுணர், தாதி ஆகியோருக்கு இந்தப் பதக்கங்களும நற்சாட்சிப்பத்திரங்களும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

இந்தச் சிறந்த சேவையாளர்களைசுகாதார அமைச்சரினுல் தெரிவுசெய்யப்பட்ட குழுவே தெரிவுசெய்யும்.

—

### உள்ளூராட்சி...

3-ம் பக்கத் தொடர்ச்சி)

யுண்டு. இதற்காக இத்திட்டத்தை மேற்கொண்ட உள்ளூராட்சி அமைச்சுக்குநமது நன்றியைச் செலுத்துதல் அவசியம்'' என்றுர்,

உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ஏ. யோசேப், வலி-கிழக்கு காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளை உடபடப் பலர் உரையாற்றினர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## திருடர் நடமாட்டம்

பருத்தித்துறை, சனி

நள்ளிரவு மூன்று வீடுகளில் திருடர் சிலர் தமது கைவரிசையைக் காட்ட முனைந்தும் ஒரு வீட்டில்மட்டுமே அவர்கள் நோக்கம் பலித்தது. ஒரு மாணவனின் சைக்கிளைத் திருடியபின்னர் ஆசிரியர் ஒருவர் வீட்டில் அவர்கள் மதிலேறிக் குதித்தபோது வீட்டிலிருந்த நாய் அவர்கள் மீது பாய்ந்ததும் சைக்கிளையும் கைவிட்டு அவர்கள் ஓடிவிட்டதாகத் தெரிகிறது.

—

## நியமனம்

சுழிபுரம், சனி

பண்டத்தரிப்பைச்சேர்ந்த திருமதி பரிமளம் சோமசுந்தரம் பண்டத்தரிப்புப் பிரிவு பிறப்பு இறப்புக்கும், வலிகாமம் மேற்கு விவாகப் பதிவுகாரராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

—

[...]றந்கும் அதிபதிகளாக விளங்கும சரஸ்வதி. லக்ஷ்மி துர்க்கை ஆகிய தெய்வங்களை உள்ளன்போடு வழிபடுதலேயாகும்.

### காளிதாசனைக் கவிஞனுக்கிய சக்தி

காளிதாசர்இவர் ஊமைப் பையனுக ஆட்டிடையனுக வாழ்ந்தார் காளியில் மிகுந்த பக்தியுடையவர். காளியினுடைய அருளினுல் ஊமை நீங்கப்பெற்று சிறந்த கவிஞர் ஆக விளங்கினுர். சாகுந்தலம், ரகுவம்சம், மேகதூதம் போன்ற பல அரிய நூல்களை இயற்றினுர். காளிதாசனிடத்தில் பல கவிஞர்கள் பொருமை கொண்டார்கள் காளிதாசரோமிக்க உள்ளன்போடு காளிக்கு மாமிசம் வைத்து வணங்குவதுண்டு. அதை அரசனிடம் காளிதாசர் மாமிசமும், மதுவும் அருந்துவதாக அரசன் அசூயை அடையும் வகையில் திரித்துக்கூறினர். ஒருநாள் அரசன் காளிதாசரை மாமிசப் பொட்டலத்தோடு கண்டான். போஜராஜன்காளிதாசரை நோக்கி கையிலிருக்கும் பொட்டணம் என்ன? என்றுன். அதற்கு அவர். 'அது வால்மீகி ராமாயணம்' என்றுர். அரசன் சிரித்துவிட்டு 'அதிலிருந்து ஏதோ சொட்டுகிறதே' அது என்ன என்றுர். 'ராமாயண சாரம்' என்றுர். மேலும் அரசன் அதிசயித்து அதிலிருந்து ஒரு நாற்றம் வீசுகிறதே அது என்ன என்று கேட்டான். 'யுத்த காண்டம்' என்றுர் காளிதாசர். எங்கே பார்க்கலாம் என்று பொட்டணத்தை வாங்கி

# தமிழ்வசமாகப் போகிறதாம்

## 'லேக்ஹவுஸ்' பத்திரிகை கூற்று

'பேராதனையிலுள்ள ஸ்ரீ லங்கா பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகமாக மாறிவருகின்றதென சர்வகலாசாலைப் பிரிவுகளிலுள்ளவர்களிடத்தில் பெருமச்சம் ஏற்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் கற்கும் தமிழ் மாணவர் தொகை வேகமாக அதிகரித்துவருவதனுல் மிகவிரைவில் சிங்கள மாணவர்களுக்கு இங்கு இடம் கிடைக்காது என்று சுட்டிக்காட்டுகிறுர்கள்

'லேக்கவுஸ்' ஸ்தாபனத்திலிருந்து வெளிவடும் இதழான 'சிலுமின' என்ற சிங்களப் பத்திரிகையின் நேற்றைய பதிப்பில் வெளிவந்தசெய்தியில் மேற்கண்டவாறு எழுதப்பட்டிருக்கிறது. இச்சிங்களப் பத்திரிகையை நேற்று கொக்குவில் செம்பியன் ஒழுங்கையைச் சேர்ந்த திரு செ. ஞானசுந்தரம் என்பவர் 'ஈழநாடு' காரியாலயத்தில் கொண்டுவந்து கொடுத்தார்

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாது:-

பல்கலைக்கழகத்தின் பல பிரிவுகளிலும் இருக்கின்ற தமிழ்மாணவர்கள் தொகை கூடிக்கொண்டு வருகின்றது. அத்துடன் பல பிரிவுகளில், தமிழ் மாணவர் தொகையுடன் சிங்கள மாணவர்களின் தொகையும் சரிசமனுகவுள்ளது.

பல்கலைக்கழகத்தின் சில பிரிவுகள் தமிழ் மாணவர்களால் நிரப்பப்பட்டுள்ளதைக் காணும் யாவரும் பல்கலைக்கழம் முழுவதும் தமிழருக்கு அடிமையாகும் தினம் அதிக தூரத்திலில்லை என்பதை அறியலாம் என்று பேராசிரியர் கூறினுர்

சென்றவருடத்தில், முதல் வருட கலைப்பட்டதாரிதமிழ் மாணவர்கள் ஒருவரையும் எடுக்கவில்லை. ஆனல் இவ்வருடத்தில் தமிழ் மாணவர் 250 பேர் கலை, கீழைத்தேய மொழிப் பிரிவுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

தமிழ்மொழி மூலமான கலைப்பட்டதாரிகளை மற்றெந்தப் பல்கலைக்கழகத்திலும் சேர்க்காது பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு மட்டும் அனுப்பத் தேசிய உயர் கல்விச்சபை தீர்மானித்துள்ளதால் கலைப்பிரிவிற்குச் சேர விரும்பிய தமிழ் மாணவர்கள் பெருந்தொகையாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேர வரம் கிடைத்திருக்கிறது.

இவ்வருடத்தில் பேராதனையில் கலை, கீழ்நாட்டு மொழிகளின் பிரிவுகளில் சேர்ந்துள்ள மாணவர்களில் மூன்றிலொன்று தமிழ்மாணவர்களே. பல்கலைக்கழகத்தில் சேருவதற்குத் தகுதியுள்ள தமிழ் மாணவர் எல்லோரும் பேராதனையில் சேர்க்கப்படவேண்டியிருப்பதால் அடுத்த ஆண்டுகளில் இங்கு கலை, கீழைத்தேய மொழிப் பிரிவுகளில் சேரும் தமிழ் மாணவர்கள் தொகை அதிகரித்துக் கொண்டுபோவது உண்மை என்றும் பேராசிரியர் கூறினுர்,

பல்கலைககழகத்தில் வைத்தியம், பொறியியல், விஞ்ஞானம் முதலிய பிரிவுகளில் சேர்வதற்குள்ள தமிழ் மாணவர்களில், பெருந்தொகையானேரும் பேராதனையில்தான் சேர்க்கப்படுவர் என்று பல்கலைக்கழ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது நடந்துகொண்டிருப்பவைகளை நோக்கினுல் இந்நாட்டின் முக்கியமானதும் பூரணமானதுமான பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குள் சிங்கள மாணவர்கள் தொகை வரவரக்குறைந்துகொண்டு போகுமென்றும், அது சிங்கள இனத்தின் பெரும் துரதிர்ஷ்டமென்றும் பல்கலைக்கழக சிங்களப் பிரிவு பேராசிரியர் ஒருவர் தெரிவித்தார்

—

## அன்பே வடிவான அன்னையே

### —ஷண்முக குமரேசன்—

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

அன்பே வடிவான அன்னையே
ஆலமுண்டவன் அருமை நயாகியே (அன்பே)

அனுபல்லவி

என்பந்தம் நீங்கஇன்னும் தாமதமேன் சோதனையோ
சம்பந்தன் ஏங்கியழ ஞானப்பால் ஈந்தனையே
(அன்பே)

சரணங்கள்

எத்தனை பாவங்கள் செய்தனனே அறியேன்
இத்தனை காலமும் வருந்தினனே அடியேன்
இன்ருள் புரிந்தென்னை ஆட்கொள்ள வாராயோ
எருமைத் தலையசுரன் அகங்காரம் அழித்தனையே
(அன்பே)

தந்தை ஏசியதும் தாய்தான் அழைப்பாளே
சொந்தம் என உன்னைத் தொழும் என்னை
வெறுப்பாயோ
மாமயில் வாகனன் மலரடி கொஞ்சினையே
வாய்மொழி பேசியுன் வரம்பெறக் கெஞ்சுவனே
(அன்பே)

## தமிழ்த் தலைவர்கள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்திலும் ஏற்பட்டது உண்மையே மாவட்டசபைக் கோரிக்கைகளை முன்வைத்தது தமிழரசுக் கட்சியல்ல காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக்காதான் மாவட்டசபை மசோதாவை முதலில் கொண்டுவந்தவர் கிடைக்க விருந்த மாவட்ட சபையும் தமிழ் அரசியல் வாதிகளின் பிரிவினையால் கிடைக்காமல் போய்விட்டது.

வடபகுதியில் இடதுசாரிக் கட்சி வெல்லமுடியும் என்பதை நிரூபித்துக்காட்டிய பருத்தித்துறை எம் பி பொன். கந்தையா அமரராகி ஒன்பது ஆண்டுகள் புரண்டோடிவிட்டன அவருடைய இழப்பைக்காலம் குறைத்துவிடவில்லை கந்தையாவின் திறமை பல துறைகளிலும் வியாபித்து நின்றது சிங்கள-தமிழ் ஐக்கியத்துக்காகப் போராடிய கந்தையாவைத் தமிழ்ப்பிரதிநிதியாகத் தமிழ்ப்பிரதேசம் தனதுமுதலாவது இடதுசாரி ஆட்சி மன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்தது உலக கம்யூனிஸ்ட் இயக்கத்துக்காக உழைத்தபேராளி திரு கந்தையா ஆவர் அவர் ஆற்றிய பெரும் பணிகள் என்றும் அணையா விளக்காய்ச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்

கம்யூனிஸ்ட் வாலிபர்சங்க சம்மேளனப் பொதுச்செயலாளர் திரு சரத் முத்தெட்டுவகம பேசுகையில் கூறியதாவது:

தமிழினம் தனித்தவொரு பாரம்பரியத்தையுடையதென்பதை எந்தவொரு கம்யூனிஸ்ட்டும் மறுக்கமுடியாது. இவ்வடிப்படையில் மார்க்ஸிஸத்தை அணுக வேண்டியதே இன்றைய வாலிபர்களின் முதற்கடமையாகும். இப்பணியைச் செய்துமுடிப்போம் என்ற நம்பிக்கையும், துணிவும், அதைப்போன்ற திறமையும் பெற்றுப் பக்குவமடையவே உலகத் தொழிலாள வர்க்கத்தின் உன்னதத் தலைவன் மாமேதை லெனின் வாலிபர்களைப்பார்த்துக் 'கல்விபயிலுங்கள்' என அறைகூவி அழைத்தார்.

நாம் மார்க்ஸிஸ லெனினிஸ வாதிகள் எனவே நமது சமுதாயத்தை உன்னிப்பாகக்கற்று ஆழமாகப்பயின்று இயங்க முன்வரவேண்டும். அப்பொழுதுதான் நமது இலக்கான சோஷலிஸப் பாதையிலிருந்து வழிதவறாது முன்னேறுவோம். இன்று முற்போக்கு அணியில் அணிதிரளும் ஆயிரமாயிரம் தமிழ் வாலிபர்களைக் காணும்போது தமிழினம் முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்திற்குத் திரண்டுவிட்டது, அப்பட்டமாகிவிட்டது.

தொழிலாளரை மலிந்த விலையில் கூலிகொடுத்துப் பெறக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இலங்கையிலே பொலிஸ் கான்ஸ்டபிள்பதவிக்கு 1200 பேருக்கு 18,000 விண்ணப்பங்கள் வந்தன. விண்ணப்பித்தவர்களில் 8 பேர் பட்டதாரிகள். கொழும்பிலுள்ள ஓட்டுப் பலகைத் தொழிற்சாலையொன்றில் 11 பெண் பட்டதாரிகள் தினச்சம்பளம் பெறும் தொழிலாளிகளாக வேலைபார்த்துவருகின்றனர், என்றுலும் எமது அரசியல் வாதிகள் எமது நாடு செல்வம் கொழிக்கிறது எனக் கூறிவருவது விந்தையானது.

தமிழ் அரசியல் வாதிகள் தென்னிலங்கையில் அரசியல் பணிபுரிவது கிடையாது. தமிழ்த் தொழிலாளர்கள் ஏராளமாகத் தென்னிலங்கையிலும் ஏனைய பகுதிகளிலும் பரந்து வாழ்கின்றனர். இவர்களின் பிரச்னைகளில் தமிழ் எம். பிக்கள் கவனம் செலுத்துவது கிடையாது தமிழரசுக் கட்சியின் மலைநாட்டுத் தொழிற்சங்கம் பலம் இழந்துவிட்டது. மலையகத் தொழிலாளிகளுக்காக் கம்யூனிஸ்ட் கட்சி போராடி வருகின்றது. வடபகுதியில் தமிழ்க்கட்சிகளின் அரசியல் வரண்டுவிட்டது. தனித்துநின்று பிரச்னைகளைத் தீர்க்கமுடியாது.''

திரு, பொன். குமாரசாமி பேசுகையில், "பொதுமக்கள் ஒன்றுதிரளவேண்டும் வாலிபர்கள் சேர்ந்து போராடவேண்டும் வேலையற்றவாலிபர்கள் வாழ்க்கை நடாத்துவதற்கு மாதந்தோறும்வேதனம் வழங்கவேண்டும்'' என்று கூறினுர்

இப்பொதுக் கூட்டம் திரு வீரபாகு தலைமையில் நடைபெற்றது மகாநாடு நடைபெற்ற நெல்லியடி லட்சுமி தியேட்டர் பண்டபத்திலிருந்து செங்கொடிகள், சுலோகங்கள் தாங்கிய ஊர்வலமொன்றுமங்களவாத்தியம், கரகநடனம் முதலிய வற்றுடன் பொதுக்கூட்ட மைதானத்தைச் சென்றடைந்தது

கூட்ட முடிவில் கரவை வள்ளுவர் மன்றத்தினரின் "எட்டீ உலக்கையை'' என்னும் நாடகமும் இடம் பெற்றது

—

வித்தார். யாழ்ப்பாண பொலிசாரும் இதைப்பற்றி விசாரித்து வருவதாகவும், அந்த 'டேப்ரிகார்ட்டை' பொலிஸ் அதிகாரியும் கேட்டுள்ளதாகவும் அறிகிறேன்.

—

ந்து நடத்துகையில், ஆந்திராவிலே காங்கிரஸ் ஆட்சியாளர், நவம்மர் மாதம் மதுபானக்கடைகளைத் திறக்கத் தீர்மானித்துள்ளது, பொதுமக்களிடையே தி மு. க. வின் மதிப்பை உயர்த்தி, காங்கிரஸின் மதிப்பைத் தாழ்த்தச் செய்யும். தமிழக அரசுசெய்த நல்ல முடிவைக்கண்டபின்பாவது, ஆந்திர அரசு மனம்மாறுமா?

ஈழத்திலே மகாத்மா, திருவள்ளுவர் விழாக்களைப் பிரமாதமாக நடத்தியும், அவர்கள் வற்புறுத்திய மதுவிலக்கைப் பற்றி. பெரிய தலைவர்களும் பேச்சு மூச்சும் இல்லாமலிருக்கிறுர்கள். காரணமென்ன?

0 0 0

கச்சை சேர் அரவர் போலும் கறையணிமிடறர் போலும், பிச்சைகொண்டுண்பர் போலும் பேரருளாளர் போலும், இச்சையான் மலர்கள்தூவியிரவொடு பகலும் தம்மை, நச்சுவார்க்கினியர் போலுநாக வீச்சரவனரே.

—அப்பர் அடிகள்.

## இலங்கை வந்துள்ள பத்திரிகையாளர் குழு

கோட்டை, சனி

உலக வங்கிகள் பற்றி ஆராய்ச்சிகளில்ஈடுபட்டிருக்கும் உயர்தர பத்திரிகையாளர்கள் குழு இலங்கைக்கு வந்துள்ளது.

அவுஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், சுவீடன், சுவிற்சர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா, யூகோஸ்லாவக்கியா ஆகிய நாடுகளிலிருந்து கடந்த புதன்கிழமையன்று வந்திறங்கிய இப்பத்திரிகையாளர்கள் குழுவினர் 10 நாட்கள் வரை இலங்கையில் தங்கி நிற்பர்.

இங்கு தங்கிநிற்குங்காலத்தில் இங்குள்ள பலதரப்பட்ட பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களையும் சென்று பார்வையிட்டு இலங்கை தனது மூலதனத்தைக் கொண்டு எந்த அளவுக்கு முன்னேறியுள்ளது, எவ்வளவு தூரம் முன்னேறலாம் என்பதுபற்றி ஆலோசனை கூறுவர் எனத் தெரிகிறது.

## கத்திக்குத்து

புலோலி, சனி

துன்னலை வடக்கு இந்திரன் அம்மன் வீதியில் நேற்று மாலை நடைபெற்ற கைகலப்பில் அதே இடத்தை சேர்ந்த வேலுப்பிள்ளை செந்திவேல் (வயது 22) என்ற இளைஞர் கத்திக் குத்துக்கு இலக்கானுர்.

கத்திக்குத்து காயங்களுடன் இளைஞன் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிசார் சந்தேக நபரைத்தேடி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org